# பாதுகாவலன்
# PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

Registered as Catholic Weekly

மலர் 123

இதழ் 11

விலை 5

15 ஒக்ரோபர் — 15 நவம்பர் 1997


# இலங்கைத்தமிழ் மக்களின் கல்வி என்னும் ஒரே செல்வத்தைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு கல்வி நிறுவனங்களிலேயே தங்கி உள்ளது



யாழ் நகர் வந்துள்ள திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட பரிசளிப்பு விழாவிலும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இலங்கைத் தமிழ் மக்களின் கல்வி என்னும் ஒரே செல்வத்தைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு கல்வி நிறுவனங்களிலேயே தங்கி உள்ளது. பல துன்பங்கள் மத்தியிலும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் முதுபெரும் சொத்தாகிய கல்விப் பாரம்பரியத்தைக் கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து பேணிவருவதை வெகுவாகப் பாராட்டினார். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை பரிசளிப்பு விழாக்கள் பெறுமதிமிக்கவை. பல சவால்கள் மத்தியில் நம்பிக்கையின் அடித்தளத்தில் நிமிர்ந்து நிற்கும் மாணவ சமூகத்தைக் கண்டு நாம் உண்மையிலேயே பெருமைப்படுகின்றோம். அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம் என்றார். திருமலை / மட்டு நகர் ஆயர் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட அதிபரின் அழைப்பை ஏற்று யாழ் நகர் வந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க தனியார் பாடசாலைகளின் பொது முகாமையாளர் என்ற வகையில் இக் கல்வி நிறுவனத்தை அரசாங்கத்தின் கையில் ஒப்படைத்த வேதனை மிகுந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது.

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்து பரிசளிப்பு விழாவில் திருமலை / மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். பரிசளிப்பு என்ப

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

புனித பத்திரிசியார் கல்லூரி வளாகத்தில் நாம் கால் மிதித்தபோது இக் கல்லூரியின் பொது முகாமையாளராக மட்டுமன்றி பழைய மாணவராக இருந்த காலத்து நினைவுகள் நம் இதயத்தில் எழுகின்றன.

புனித பத்திரிசியார் கல்லூரி ஆங்கிலக் கல்வியை பெரிதும் போற்றி வளர்த்த கல்வி நிறுவனமாகும். நாற்பது ஆண்டுகளுக்கு முன் இந்தநாட்டில் கொண்டு வரப்பட்ட சுயபாஷைக்கல்வித்திட்டம் ஆங்கில மொழியை முற்றிலும் அந்நியமொழியாக்கி விட்டமை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## எனது பாடசாலை என்ற உணர்வு மாணவர்களுக்கு மிக முக்கியமானது

— அருள்திரு ஆனந்தகுமார்

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் மரியன்னை பேராலய உதவிப் பங்குத்தந்தை, "மாணவர்கள் பாடசாலையை அன்பு செய்ய வேண்டும். எனது பாடசாலை என்ற உணர்வு மாணவர்களுக்கு மிக முக்கியமானது" என மாணவர்களையும் "உங்கள் பிள்ளைகளும் இங்கு கல்வி கற்கின்றார்கள். என்னும் மனநிலை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கிறிஸ்தவ நாகரிகத்துறைப் பதில் தலைவராக அன்ரன் மத்தாயஸ் அடிகள்

கிறிஸ்தவ நாகரிகத்துறையின் பதில் தலைவராக அருள் திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார். 1984 ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக் கழகக் கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர் 1991 இல் கலாநிதிப் பட்டம் பெற்றார். யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையில் "19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## குருக்களுக்கான வருடாந்த தியானம்

குருக்களுக்கான வருடாந்த தியானம் நவம்பர் 09, 97 முதல் நவம்பர் 15, 97 வரை பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் நடைபெறும். கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள் திரு அன்சலம் குறூஸ் அடிகள் தியான உரைகளை வழங்குவார்.

தென்னிந்திய திருச்சபை முன்னாள் யாழ். ஆயர்

## D. J. அம்பலவாணர் காலமானார்

தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தின் முன்னாள் பேராயர் அதிவண டி. ஜே. அம்பலவாணர் 10-10-97 வெள்ளி தமது 69ஆவது வயதில் நோயினால் யாழ் வைத்திய சாலையில் மரணமானார்.

1971ஆம் ஆண்டு யூன் மாதம் 43ஆவது வயதில் பேராயராக அபிஷேகம் செய்யப்பட்ட இவர் கடந்த 1993ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஓய்வு பெற்றார்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## முகமாலை ஆரோக்கிய அன்னை ஆலய விழா

முகமாலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா புரட்டாதிமாதம் 21-ம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. ஆயர் தமது மறையுரையில் "மரியாள் எமக்கு காட்டுவது யேசுவின் பாதையை ஆகும். கானாவூர் கலியாணத்தில் இரசம் பற்றாமல் போனபோது மரியாள் சீடர்களைப் பார்த்து யேசு உங்களுக்கு சொல்வதை செய்யுங்கள் என்றார். இன்றும்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## தேசிய மறைக்கல்வித் தேர்வு

இரண்டாம் மூன்றாம் ஆண்டுகளுக்கான தேசிய மறைக்கல்வித் தேர்வு எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி இடம் பெற உள்ளது. யாழ் மறை மாவட்டத்தில் நடைபெற இருக்கும் மேற்படி பரீட்சைக்கான ஆயத்தங்களை யாழ் மறைக்கல்வி நிலைய இயக்குனர் மேற்கொண்டுள்ளார்.

# ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு அதிகாரி இலங்கையில் தங்க வேண்டும்

— யாழ் மறை மாவட்ட நீதி சமாதானக் குழு —

ஐ. நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழுவின் விசேட தொடர்பாளர் அண்மையில் யாழ். விஜயம் செய்தபோது யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக் குழு அவரைச் சந்தித்தது.

அவ்வேளை, போரினால் எமது மக்கள் சந்தித்துள்ள பலவகைப்பட்ட துன்பங்கள், பல வகைப்பட்ட மனித உரிமை மீறல்கள் போன்றவற்றைப்பற்றி எடுத்துக்கூறப்பட்டது.

குறிப்பாக, பின்வரும்கோரிக்கைகளை நீதி சமாதானக்குழு முன்வைத்தது.

★ அவசரகாலச்சட்டம் என்ற போர்வையில் பலமனித உரிமைகள் தற்காலிகமாக தடுக்கப்படுகின்றன, அன்றேல் மட்டுப் படுத்தப்படுகின்றன.

இருப்பினும் சில உரிமைகள் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கூட மறுக்கப்பட முடியாதென்பது சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளது. சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமை என்னும் உரிமை இதற்கு ஒரு உதாரண

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## எம்கருத்து

### ஆயரின் வேண்டுகோளும் சமாதானமும்

அமைதியும் சமாதானமும் தமிழ்மக்களுக்கு மிக நீண்ட காலமாகத் தூரத்துப் பச்சையாகவே தோன்றுகின்றது. எல்லாக் காலங்களையும்விட இக்காலத்தில் நீதியுடன் கூடிய சமாதானத்திற்கான தேடல் அதிகரித்துள்ளது.

யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக்குழு ஆயரின் அனுமதியுடன் மாதம் ஒரு ஞாயிறு தினத்தைக் குறிப்பாக முதல் ஞாயிறு தினத்தைச் சமாதான தினமாக அனுசரிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது. உண்மையான சமாதான உணர்வு எம்மில் உருவாகும் வண்ணம் திருப்பலி, செபவழிபாடு, பொதுநலப்பணிகள் போன்றவற்றை, பங்குகளில் நிறைவேற்றி இந்தச் சமாதான தினத்தை அர்த்தமுள்ளதாக்கும்படியும் கேட்டுள்ளது.

இலங்கையின் சமாதானத்திற்கான செபஇயக்கக் குழுவும் ஒக்ரோபர் மாதத்தைச் சமாதானத்திற்காக செபிக்கும் மாதமாக அனுசரிக்கும்படி இலங்கை ஆயர்மன்றப் பேரவையின் அனுமதியுடன் கோரியுள்ளது. குறிப்பாக ஒக்ரோபர் மாதத்தில் சமாதானத்திற்காகச் செபிக்கவும் தேவதாயாரை நோக்கிச் சமாதானத்திற்கான செபத்தைத் தினமும் திருப்பலி வேளையில் ஒப்புக்கொடுக்கவும் வேண்டியுள்ளது.

யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகள் சமாதானத்திற்கான தேடலின் தேவையை ஆழமாக உணர்ந்து இந்த வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு சமாதானத்திற்காகப் பல வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் செய்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

கத்தோலிக்க பங்குகளும் நிறுவனங்களும் மட்டுமல்ல, இந்துசமய நிறுவனங்களும், ஆலயங்களும் சமாதானத்திற்கான தேடலிலும் வேண்டுதலிலும் ஈடுபட்டிருக்கின்றன.

பன்னெடுங் காலமாகத் தமிழ்மக்களுக்கு வெகு தூரத்துப் பொருள்களாகவே இருக்கின்ற அமைதியும் சமாதானமும் மிகவிரைவிலே கிடைக்க எல்லோரும் ஒன்றித்து உழைக்க வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம். நீதியுடன் கூடிய சமாதானம் எம் மண்ணுக்கு வெகுவிரைவிற் கைகூட உழைப்பதும், செபிப்பதும் தமிழ்மக்கள் எல்லோருடையவும் சிறப்பான கடமைகளாகும்.

இன்றுவரை சமாதானத்தைத்தேடி அலைந்து கொண்டிருக்கும் மக்களுக்குச் சமானத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரேவழி 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் தான் என்ற தம் கருத்தை யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பல தடவைகள் வலியுறுத்தி வருகின்றார்.

நெதர்லாந்து தூதரகப் பொறுப்பாளர் தூதரகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் ஆயர் இல்லத்தில் சந்தித்தபோது மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் பற்றிய தம் ஆர்வத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு அரசுகளின் பிரதிநிதிகள், தூதுவர்களும் இலங்கை அரசு சமாதானப் போக்கைக் கைக்கொள்ள அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் விண்ணப்பித்துள்ளார்.

அவுஸ்திரேலியத் தூதுவர் திரு டேவிற் றிற்றி யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்தபோதும் மூன்றாம் தரப்பு எமது இனப்பிரச்சினைத் தீர்வு மத்தியஸ்தம் பற்றி யாழ்ஆயர் மீள வற்புறுத்தினார்.

மேலும் தம்மைச் சந்தித்த வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் கூட சமாதானம் பற்றிய தம்முடைய பேராவலைத் தெளிவுபடுத்தினார்.

ஆயருடைய இந்த ஆணித்தரமான கருத்தை யாழ்ப்பாண உதயன் பத்திரிகையும், கொழும்புப் பத்திரிகைகளும் ஆசிரியத்தலையங்கங்களில் தெளிவுபடுத்தி ஆதரித்து வலியுறுத்தி இருந்தன.

ஆயருடைய இந்த வேண்டுகோளுக்கு இரு தரப்பினரும் செவிமடுத்து நல்லன நடக்க வழிவகுக்க வேண்டுமெனப் பேராவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

## பொன்விழாக் காணும் செபமாலைக் கன்னியர்சபை 1948 - 1998

பெருக்கெடுப்பதும், உணரப்படாததுமான மனித பாவத்திற்காய் இறைமுன் நின்று மன்னிப்பை இரக்கவும், பரிகாரம் செய்து பலியாகும் பணி மூலம் இறையரசுக்காக உழைக்கவும் அருள்தந்தை தோமஸ் அடிகள் யாழ் மண்ணில் வித்திட்ட செபமாலைக் கன்னியர் சபை தனது பொன்விழா யூபிலி ஆண்டை புரட்டாதி மாதம் 8-1997 ல் தொடங்கி புரட்டாதி மாதம் 8-1998 வரை கொண்டாடுகிறது.

1926-ல் பரிசுத்த தந்தை 11-ஆம் பத்திநாதர், சுதேசியான இறையனுபவ சபைகளை உருவாக்குவதில் ஊக்கம் செலுத்துமாறு 'றேனும் எக்கிளேசியே' என்ற தமது திருமடல் மூலம், தலத்திருச்சபை ஆயர்களைக் கேட்டுக்கொண்டார். அப்போது யாழ் ஆயராயிருந்த வந்தனைக்குரிய கியோமர் ஆண்டகையின் வேண்டுகோளின் பேரில் யாழ் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட அருள்திரு அந்தோனி தோமஸ் அடிகள் (அ.ம.தி) தோலகட்டியில், இச்சபையை முதல் முதலாக அடியிட்டார். ஆண்கள் சபை நிறுவப்பட்டு 20 ஆண்டுகளின் பின், 1948 இல் கன்னியர் சபை வசாவிளான் என்னும் இடத்தில் உருவாக்கப்பட்டது. இவ் ஐம்பது வருடங்களிலும், இலங்கையில் 7 மடங்களும் இந்தியாவில் 7 மடங்களுமாக இச்சபை விரிவடைந்துள்ளது.

அருட்திரு தோமஸ் அடிகள் ஒரு மறைபோதக சபையைச் சார்ந்தவர். அவரது காலத்தில் நிலவிய பொருளாதார, சமூகப்பாகுபாடுகளை, ஏற்றத் தாழ்வுகளை, மனிதர் மனிதருக்குச் செய்யும் அநீதியாகவும் இறைஞானமற்ற அறியாமையாகவும் கண்டார். மனிதரது இறையுணர்வில்லாத் தன்மையை மனிதன் இறைவனுக்கும் தனக்கு தானேயும் செய்யும் அநீதியாகவும் மனித மடைமையாகவும் கண்டார். இத்தகைய சமூதாயத்தில், இறையரசின் தோற்றத்தைக் கொணர, இறையரசை வெளிப்படுத்த, திருச்சபைக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்த, மறைப் பணிகளோடு அருகே துணைபோக அவர் கண்டுணர்ந்து, கையாண்ட யுக்தியே தியான, தியாக, பரிகாரவாழ்க்கை நெறி. மனித விடுதலையில் எப்போதுமே தாய்க்குரிய அக்கறை கொண்டு விளங்கும் மரியன்னையோடு இணைந்து, கிறிஸ்துவில் தந்தையின் மீட்புத்திட்டங்களை உள்ளத்தில் இருத்தி, தியானித்து, செபிப்பதன் மூலம் மனித இதயங்கள் பாவத்தை வெறுத்து, கிறீஸ்துவைத் தம் வாழ்வில் ஏற்றுக்கொள்ள உள்ளரங்க தூண்டுதலாக அமைய உழைப்பது சபையின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். செபமாலைத் துறவியரின் செப, பரிகார உழைப்பின் குரல் 'உமது அரசு வருக' என்பதே. அதாவது சமத்துவம், சகோதரத்துவம், மன்னிப்பு, மனித மாண்பு, ஒற்றுமை போன்ற இறையரசின் குணங்கள் மனித மனங்களில் மலரவேண்டும் என்பதே. இறையுணர்வு, சமத்துவம், நீதிக்காய் எதிர்ச்சாட்சியம் கொடுத்து இறைப்பலத்தால் புரட்சி செய்த எளிய இறையடியான் தோமசின் கனவுகளை தற்கால தேவைக்கேற்ப மீட்டெடுக்கவும், எதிர்கொள்ளும் யுகத்தை அவரது கண்களூடாக நோக்கி அவர் அடியிட்ட புரட்சிக்குப் புத்துயிர் கொடுக்கவும் வேண்டிய சவாலையும், அறை கூவலையும் செவிமடுக்க இப்பொன் விழா ஆண்டு சபையோரால் வரவேற்கப்படுகின்றது.

செபமாலைக் கன்னியர்
யாழ்ப்பாணம்.

## யாழ் திருச்சபை வரலாறு

### நூல் அறிமுகம் "யாழ் ஜெயம்"

கி. பி. 2000ஆம் ஆண்டை ஆன்மீக முறையில் வரவேற்க ஒவ்வொரு மாவட்டமும், தம் தலத்திருச்சபை வித்திடப்பட்டு வேரூன்றி விருட்சமாகிய கடந்த காலத்தை ஆராய்ந்து ஆண்டவனால் அளிக்கப்பட்ட அருள் வளங்கட்காக நன்றி கூறிக் குறைபாடுகள், பிரச்சினைகள், பிளவுகளை ஆராய்ந்து அவற்றை விலக்குவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும் என்ற பரிசுத்த பாப்பரசரின் சுற்றுமடலுக்கிணங்க கி. பி 50ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1950ம் ஆண்டு வரையிலான யாழ் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றை (பாரபட்சமின்றி) ஆராயும் J.E. ஜெயசீலன் அடிகளாரின் இந்நூல் பாண்டித்தியமும், புனித நோக்கமும் இணைந்த ஒரு முயற்சியாகும்.

யாழ் திருச்சபை வரலாறு 5 பாகங்களைக் கொண்டது.

1. ஆதிகாலம் (கி. பி. 50ஆம் ஆண்டு தொடக்கம்)
2. போர்த்துக்கேயர் காலம்
3. ஒல்லாந்தர் காலம்.
4. ஆங்கிலேயர் காலம்
5. நவீன காலம் (கி. பி. 1950ஆம் ஆண்டுக்குப் பின்)

முதல் 4 பாகங்களையும் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்திருக்கின்றது. நவீனகாலம் சிறிது தாமதித்தே வருமென அறியப்படுகின்றது.

"வேதசாட்சிகளின் இரத்தம்'' கிறிஸ்து பெருமானின் விலை மதிக்கற்கரிய தூய இரத்தத்துடன் இரண்டறக் கலந்து கத்தோலிக்க மக்களை இரட்சணியப் பாதையில் வீறுநடை போடச்செய்கின்றது என்ற இறையியல் உண்மைக்கு யாழ் திருச்சபை ஒரு நல்ல உதாரணம் என்பதை இந்த வரலாற்று நூல் ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றது.

அதே வேளை பல்வேறு காரணிகளினால் ஏற்பட்ட விசுவாச சரிவினாற் சோர்ந்து, திகைத்து மதில்மேற் பூனைபோல் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

இருக்கும் பெருவாரியான யாழ் திரு மறையினரின் பாரம்பரியத்தை உணர்த்தும் வண்ணம் புனித தோமையாரின் வருகையிலிருந்து ஆரம்பித்து, கத்தோலிக்க மதத்தின் வலிமைகளையும், பெருமைகளையும் சான்றுகளுடன் எடுத்துச் சொல்லியிருப்பது கத்தோலிக்க மக்களிடையிற் புத்துணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

யாழ் திருச்சபையின் வரலாற்றை எழுதும்போது ஏனைய நூலாசிரியர்களின் நிறைகளைப் புகழ்ந்தோ, குறைகளை மறைத்தோ, மழுப்பியோ காட்டும் மரபிலிருந்து இந்நூலாசிரியர் பிறழ்ந்து பிரச்சினைகளை, பிளவுகளைச் சுட்டிக்காட்டி சாதக பாதகங்களை வெளிப்படுத்தியிருப்பதும், திருச்சபையின் வரலாற்றை இதுவரை வரைந்த வரலாற்றாசிரியர்கள் தேவையற்றதென ஒதுக்கிவிட்ட சம்பவங்கள், நிகழ்வுகள், இடங்களை ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

கத்தோலிக்க மதம் சுதேசவழக்கங்கள்மொழிகள்கலாசார சூழ்நிலைகளுடன் பின்னிப் பிணைந்து இந்த மண்ணின் மொழி, கலை, இலக்கியங்களைக் கத்தோலிக்கம் கட்டிக்காத்து வளர்த்து முன்னேற்றியுள்ளது என்பது ஆதாரங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணகர்த்தாக்களாகவும், உறுதுணையாகவும்இருந்தவர்களைப் பற்றியகுறிப்புக்கள் துணுக்குகள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருப்பது மனத்திற்கு நிறைவைக்கொடுக்கின்றது.

தாந்திரிக மரபிற் கத்தோலிக்க மதமும் ஊறித் திளைத்து பக்திப் பரவச வழிபாடுகளில் வளர்ந்துள்ளது என்பதும் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுநூல்ஆய்வாளர்களுக்கும்சிறப்பாகஒப்பீட்டியலில் மதவரலாற்றைக் கற்போருக்கும் மிகவும் பயன்தரக்கூடிய ஆவணக் களஞ்சியமாக இருக்கும் என்பதோடு இன்னும் சில தசாப்தங்களின் பின்னர் மிகவும் உபயோகமான கையேடாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இந்தப் பெறுமதிமிக்க வரலாற்றுத் தகவல் களஞ்சியத்தின் 4 பாகங்களையும் படித்துச் சுவைத்த பின் 5ஆம் பாகத்தினை எப்போ படிப்போம் என்ற ஆவலையும் ஏற்படுத்திவிட்ட ஆசிரியருக்கு எமது நன்றிகள்.

# வைர ஆண்டைக் கடந்த யாழ். பொதுநிலைப் பிரான்சிஸ்கன் சபையின் பாதையில்

**ஆயர் J. A. கியோமர்**

ஆண்டவனில் துயிலும் ஆயர். J. A. கியோமர் அவர்களால் யாழ் மக்களுக்கு ஆன்மீகப் பலமளிக்க அளிக்கப்பட்ட சபைகள் பலவுண்டு. அவற்றில் வைர விழாக் கண்ட பொதுநிலைப் பிரான்சிஸ்கன் சபையும் ஒன்றாகும். இச்சபைகளின் நெறிப்படுத்தும் செயல் வீரனாக இருந்தவர் அ. ம. தி துறவியான அருள்சகோதரர் இயூஜின் குருசோ ஆவார்.

**அருள்சகோதரர் இயூஜின் குருசோ**

யாழ் மக்கள் மனதில் இறை யேசுவின் ஆட்சியை அடியிட 25. 12. 34 இல் நான்கு இளைஞருடன் அருள்சகோதரர் தம் பணியைத் தொடங்கினார். இளைஞர் நால்வரும் சூசையப்பர் பக்திச் சபையைச் சேர்ந்தவர்கள்.

புனித பிரான்சிஸ் அசிசியாரின் புனித வாழ்வு, ஏழ்மை வாழ்வு உலக மக்களின் உள்ளங்களில் இறையேசுவை ஊன்றிவிட உற்ற வழியாக இருந்தது. எனவே அருள்சகோதரர் தம்முடன் பணிபுரிய வந்த நால்வருடன் இச்சபையைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டார். அவர் சபையின் சட்ட திட்டங்களை இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்டார். வாரந்தோறும் பயிற்சி வகுப்பு வைத்து, அவற்றை விளக்கி வந்தார். ஞானப் பயிற்சி அளித்தார்.

1935-9-28 இல் இந்தியாவிலுள்ள அக்ரா மாவட்ட புனித பிரான்சிஸ்கு சபையின் தலைவர் அருள்திரு அபயசிந் OMCAP அடிகளின் அங்கீகாரம் யாழ் சபைக்குக் கிடைத்தது.

1935-10-4 இல் யாழ் மண்ணில் இச்சபை ஒழுங்கு முறையாக அடியிடப்பட்டது.

8 அங்கத்தவர் சபையின் தபஉடை பெற்று ஆயத்தநிலையை அடைந்தனர்.

1936-10-4 இல் புனித பிரான்சிஸ்கு அசிசியாரின் திருநாளன்று ஏழுபேர் சபை வாக்குத்தத்தம் எடுத்து நிரந்தர அங்கத்தினராயினர்.

**வளர்ச்சி**

ஆண்டுக்காண்டு சபை வளர்ந்தது. ஆண்கள் மட்டும் அங்கத்துவம் பெற்றிருந்த சபை 1947 இல் பெண்களையும் சேர்த்துக் கொண்டது.

மிருசுவில், கரம்பொன், இளவாலை, பருத்தித்துறை, கோப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களிலிருந்தும் பலர் சபையில் சேர்ந்தனர். சில ஆண்டுகளின் பின் கரம்பொன், இளவாலை, மிருசுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் கிளைச் சபைகள் பிறந்தன.

**ஞானத்தலைவர்கள்**

ஞானநீர் ஊற்றி, வளர்த்து, பாதுகாத்து சபைக்கு உரம் ஊட்டிய இறையடி சேர்த்த ஞானத்தலைவர்கள்.

1. அருள்திரு. கில்லறி அடிகளார்
2. அருள்திரு. என். யோசவ் அடிகளார்
3. அருள்திரு. யோண் மேரி கட்சன் அடிகளார்
4. அருள்திரு. ஏ. ஈ அல்பிறட் அடிகளார். ஆவர்.

இன்று சபையின் ஞானத்தலைவராக யாழ்மாவட்ட குருமுதல்வர் அருள்திரு. J. P. E. செல்வராஜா அடிகளார் பணியாற்றி வருகிறார். இவரின் வழிகாட்டலில் சபை ஆன்மீகப் பலம் பெற்று செழிப்புற இறைபணியாற்றி வருகின்றது.

**சபைத்தலைவர்கள்**

சபை கருவாகி, உருவாகி உறுதி பெற முன்னோடியாக உழைத்த தலைவர்கள், சகோதரர்கள் அ. பி. முத்தையா, ஈ. ச. பிரான்சிஸ் ஒவ்மோ ஆவர். இவர்கள் 50 ஆண்டுகள் அங்கத்தவராக இருந்து, சபைக்காக அரும்பணியாற்றினார்கள். இவர்களின் அடிச்சுவட்டில் சகோதரர் ச. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார். பத்து வருடங்களுக்கு மேலாக சபையை சிறப்புற வழி நடத்தினார். 1993-2-20இல் சகோதரர் L. C. நீக்கிலஸ் அவர்கள் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். போர்க்கால பட்டறிவூடாக புனித அசிசியாரின் இறைபற்றின் சக்தி கொண்டு சபைக்கு 140 அங்கத்தவர்களை இவர் சேர்த்தார். இன்றும் சேர்த்து வருகிறார். 80 உறுப்பினர்கள் நித்திய வாக்குத்தத்தம் செய்து தபஉடைபெற்று நிரந்தர உறுப்பினராக ஆக்கி உள்ளார். துன்ப சூழலில் சபை தூங்கிடாது துன்பப்படும், பின்தங்கிய மக்களுக்கு செயலூக்கம் அளித்திடும் இவர் இயக்கும் இறைப் பற்றின் தூண்டுதலே என்பது உறுதி.

**நன்றி**

வைர ஆண்டைக் கடந்து வந்த சபை சந்தித்த துன்ப துயரங்கள் எத்தனை? எத்தனை?

போர்க்காலச் சூழலில் பட்ட இன்னல்கள் எவ்வளவு? இத்தனையும் தாங்கி, பலம் குன்றாது பலத்துடன் இருக்க பாதுகாப்பும், உறுதியும் தந்த பரமனே! உமக்கு எம் நன்றிகள்! ஏற்றருள்வீர்.

வறுமையின் வடிவாகி, அதன் வளமாகி, இறை யேசுவில் உறுதி பெற்று, எம் சபையின் பிதாவாக புனித பிரான்சிஸ் அசிசியாரே எம் நன்றியை உமக்கு அளிக்கின்றோம்.

எம் சபைக்கு உங்கள் பணியால் உரம் ஊட்டி பரமன் பதம் அடைந்த உயர் ஞானத்தலைவர்களே! அன்புச் சகோதரர்களே! உங்கள் ஆன்மா நித்திய பேரின்பத்தில் இளைப்பாற நாம் நித்தம் வேண்டுகின்றோம்.

சகோதரர் யோசேப்பு ஞானப்பிரகாசம் S.F.O
யாழ். மரியன்னை பேராலயம்

# திருத்தந்தையுடன் மூன்றாம் சகாப்தத்தை நோக்கி...

மனிதமும் விஞ்ஞானமும் மின்னலென வளர்கின்ற காலத்தில் புதுமையும், புதுமை விரும்பிகளும் மலிந்து செல்கின்ற வேளையில் நாம் இரண்டாம் சகாப்தத்தின் இறுதிக் காலங்களில் இருந்து கொண்டு மூன்றாம் சகாப்தத்தினை நோக்குகின்றோம். பல எதிர்ப்புக்களும், பல அங்கலாய்ப்புக்களும் பல கேள்விக்குறிகளுமே இந்த மூன்றாம் சகாப்தத்திற்கு வடிவம் கொடுப்பனவாக இருக்கின்றன.

இந்த இரண்டாயிரமாம் ஆண்டை எதிர் நோக்கி கிறிஸ்தவர்கள் மட்டும் ஆயத்தம் செய்யவில்லை. இந்த 2000ம் ஆண்டை எதிர் கொள்ள அரசியல், பொருளாதார ரீதியாக பல ஒழுங்குகள் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இருப்பினும் இந்த 2000 ம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமானது. இந்த ''யூபிலி விழா'' கிறிஸ்தவர்களுக்கு புதியது ஒன்று அல்ல. விபிலியத்தில் பழைய ஏற்பாட்டு காலம் முதல் கொண்டாடப்பட்டு வரும் வேதாகம விழுமியங்களை தன்னகத்தே கொண்ட விழாவாகும். கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்கு பின் என்று காலக் கணிப்பு செய்வது கிறிஸ்துவுடன் தான் ஆரம்பமானது. இன்னும் மூன்று ஆண்டுகளில் யூபிலி ஆண்டை அடையப் போகும் நிலையில் இந்த ஆண்டை புனித ஆண்டாக கொண்டாட எம்மை தயார்ப்படுத்த 97,98,99ம் ஆண்டுகளை பயன்படுத்தும்படி திருச்சபை கேட்டு நிற்கின்றது.

திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனது "ரேர்சியோமில்லேனியோ அட்வேனியென்ரே (Tertio Millenio Adveniente) என்ற தலைப்பிலான சுற்று மடலில் 2000 ம் ஆண்டை மாபெரும் யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தி அதை அர்த்தமுள்ள முறையில் கொண்டாட அனைத்துலக திருச்சபைக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இச் சுற்று மடலானது ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. "இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் (எபி 13:8)''—என்பதை மையப் பொருளாக திருத்தந்தை தனது முதற் பகுதியில் எடுத்துரைக்கின்றார். வார்த்தை மனுவுருவானார். அவரே தந்தைக்கும் மக்களுக்கும் இடையேயான பரிந்துரையாளரானார். மனுக்குவத்தோரின் எல்லா மதங்களினதும் நிறைவேற்றமாய் அவர் இருப்பதன் காரணத்தால் அவற்றின் ஒரே தீர்க்கமான அத்திவாரமாகவும் உள்ளவர் என இயேசுவைச் சித்தரிக்கின்றார்.

அருட்சகோ. எஸ்.ஏ.றொஷான்
புனித சவேரியார் குருத்துவ கல்லூரி,
கொழும்புத்துறை.

இரண்டாம் பகுதியிலே அவர் யூபிலி விழாவின் வரலாற்றையும், அதன் அர்த்தத்தையும் வேதாகமத்தின் அடிப்படையிலே ஆழமாகச் சிந்தித்து, இந்த 2000 ம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவ மறை முன்னணி நிலை வகுத்திருந்த காரணத்தினால், அது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல மாறாக, முழு மனித சமூகத்திற்குமுரியது என்பதையும் மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றார்.

மூன்றாம் பகுதியில் யூபிலி விழாவிற்கான முன் ஏற்பாடுகளைப் பற்றிச் சித்தரிக்கின்ற திருத்தந்தை, சரித்திரம் வெறும் வரலாறு அல்ல மாறாக அவற்றில் இறை தலையீட்டை இறை வெளிப்பாட்டைக் காண முயல்கின்றார். 2ம் வத்திக்கான் சங்கம், இந்த யூபிலியின் ஆயத்தத்துக்கான இறை யேசுவின் நிகழ்வே எனக் கருதுகின்றார். பொதுப் பேராயம், கண்ட மட்டத்திலான பேராயம், பிராந்திய பேராயம், தேசிய பேராயம், மறை மாவட்ட பேராயம், மற்றும் பாப்புமாரின் சமூக சுற்று மடல்கள் அனைத்தும் இறை ஊக்கத்தால் ஏற்பட்ட முன் ஏற்பாடுகளே என கருத்துரைக்கின்றார்.

நீண்டதும் முக்கியத்துவமான நான்காம் அத்தியாயத்திலே யூபிலிக்கு நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய ஆயத்தங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இது இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, முதற் கட்டம் (1995 – 1996) - முன்னாயத்த பங்காகவும், இரண்டாம் கட்டம் படிமுறையான ஆயத்தமாகவும் அமைகின்றது.


முதலாம் ஆயத்த பகுதி கிறிஸ்தியலை (Christology) மையப்படுத்தி யூபிலியின் பெறுமதி, பொருள் பற்றிய விழிப்புணர்ச்சியை கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற காலமாக அமைகின்றது.

இரண்டாவது ஆயத்த காலப் பகுதி 1997 முதல் 1999 ம் ஆண்டு வரை நீடித்திருக்கும். இக்காலப்பகுதி மூவொரு கடவுற் தன்மை வாய்ந்த இறையியல் தன்மையைக் கொண்டிருக்கும். முதல் ஆயத்த ஆண்டு (1997) கிறிஸ்து பற்றிய சிந்தனைகளுக்கும், இரண்டாம் ஆண்டு சிறப்பான விதத்தில் தூயஆவியானவருக்கும், கிறிஸ்துவின் குழுமங்களில் காணப்படும் அவரது புனிதமாக்கும் பிரசன்னத்திற்கும் அர்ப்பணிக்கப்படும். இறுதியாக மூன்றாவது ஆயத்த காலப்பகுதி தந்தையாம் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும். இம் மூன்று ஆயத்த ஆண்டுகளிலும் பரிசுத்த கன்னிமரியாள் நித்திய தந்தையின் மகனாகவும், இறைமகனின் தாயாகவும், ஆவியா

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# புனித சின்னத் திரேசாளின் வாழ்க்கை வரலாறு

பிறப்பு — 2. 1. 1873
திருமுழுக்கு — 4. 1. 1873
தாய் தந்தை — திரு திருமதி லூயிஸ் மாட்டீன்
சகோதரிகள் நால்வரும் — கன்னியர்கள் (கார்மேல்)
முதல் நன்மை — 13. 5. 1880
தேவதாயின் காட்சியும் புதுமையாகக் குணப்படுத்தலும் 19. 5. 1883
கார்மேல் சபையில் பிரவேசித்தல் — 1. 1. 1888
நவசந்நியாசம் — 10 .1. 1889 — 24. 9. 1890
துறவற அர்ப்பணம் — 24. 9. 1890
விண்ணக வாழ்வின் ஆரம்பம் — 30. 9. 1897 மாலை 7.20
நல் அடக்கம் 4. 10. 1897
முத்திப்பேறு பெற்ற பட்டம் — 29. 4 1923 11 ம் பத்திநாதரால்
புனிதர் நிலைக்கு உயர்த்துதல் — 17. 5. 1925
மறைபரப்புப்பணி பாதுகாவலியாகப் பிரகடனம் — 14. 12. 1927
பிரான்சு தேசத்தின் 2 ம் பாதுகாவலியாகப் பிரகடனப் படுத்தப்பட்டது — 3. 5. 1944 12 ம் பத்திநாதரால்
விண்ணக வாழ்வின் நூற்றாண்டு நிறைவு — 30. 9. 1997
திருச்சபையின் மறைவல்லுனர்களின் ஒருவராக பிரகடனம் 2ம் அருள் சின்னப்பர் — 19. 10. 1997



'குடும்பம் ஒரு கதம்பம்' வாசக அன்பர்களுக்கு வணக்கம்.

எங்களுடைய வேண்டுகோளுக்கு செவி மடுத்து ஒரு சில அன்பர்கள் இப்பகுதியில் இடம்பெறக்கூடிய ஆக்கங்களை அனுப்பிவைத்திருக்கிறார்கள். பொருத்தமான காலம் வரும்பொழுது கதம்பத்தில் அவை இடம்பெறும். அவர்களுக்கு எங்களுடைய நன்றிகள். இந்தமுறை குடும்பவள நிலையத்தின் இயக்குனர் தந்தை குடும்பத்தின் கதாநாயகர்களான கணவன் மனைவிக்கிடையில் இருக்க வேண்டிய ஆழ்ந்த நெருங்கிய உறவு பற்றி கட்டுரை வழியாக உங்களோடு உரையாட வருகின்றார். வாசித்து அனுபவியுங்கள். குடும்பத்தில் இடம்பெறக்கூடிய சுவையான, சுவை அற்ற நிகழ்வுகளைக் கூட எழுதி அனுப்புங்கள். இப்பகுதி பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள் கதம்பத்தை வளமாக்க உதவியாய் இருக்கும். எதிர்பார்க்கலாமா?

எஸ். எவ். சவுந்தரம்

ஒரு மனிதனின் வரலாற்றிலே இரண்டு ஆழ்ந்த நெருங்கிய உறவுதான் இருக்கமுடியும்.

1. பெற்றோர் குழந்தை உறவு.
2. கணவன் மனைவி உறவு.

கணவன் மனைவி உறவு திருமணத்தில் ஆரம்பமாகின்றது. புதிதாக திருமணம் முடிக்க போகின்றவர்களைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்பது உண்டு. அதாவது: திருமணம் முடிக்கின்றவர்கள் எப்போது "நான்" நிலையில் இருந்து "நாமாக" மாறுகின்றனர்? இதற்கு பல்வேறுபட்ட பதில்களை தருவார்கள். அவற்றில் சில இதோ,

"திருமணமான முதல் நாளிலேயே நான் "நான்" இல் விருந்து "நாம்" ஆக மாறிவிடுகின்றோம்" நாம் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்கின்றோம் என்று சம்மதம் கொடுத்த பிற்பாடு இந்த மாற்றம் ஏற்படுகின்றது.

திருமணம் நிறைவேற்றுகின்ற குருவின் ஆசீர்வாதத்துடன் "நான்" இல்லிருந்து "நாம்" ஆக மாறுகின்றோம் என்பர்.

ஆழ்ந்த நெருங்கிய உறவு– "நான்"லிருந்து "நாம்" ஆக மாறுதல் ஒரு சடுதியாக நடைபெறுகின்ற ஒரு மாற்றம் அல்ல. அல்லது திருமணச் சடங்கில் ஒரு குருவின் ஆசீர்வாதம் "நான்" இல்லிருந்து "நாம்" ஆக மாறுவதற்குபயன்படுத்தப்படும் ஒரு வித்தையுமல்ல. மாறாக இந்த ஆழ்ந்த நெருங்கிய உறவு திருமணத்தன்று வித்திடப்பட்டு நாள்தோறும் வளர்க்கப்படவேண்டிய ஒரு உறவாகும். இந்த உறவு திருமணம் முடித்த பிறகு தம்பதியருக்கு தரப்படும் ஒரு வீடு, ஒரு கட்டில், ஒரு விலாசம் என்பவற்றால் வளர்க்க முடியாத ஒன்று. இந்த உறவுக்கு ஒருவர் ஒருவருடைய அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வு தேவை. திருமண வாழ்வில் ஆழ்ந்த நெருங்கிய உறவு திருமணத்தம்பதியருக்கு ஒரு சவாலாக மாறுகின்றது. ஏனென்றால் இரண்டு பேரும் திருமணத்தில் இணையும்போது இரு பெரும் சரித்திரங்களை தங்களுடன் கொண்டு வருகின்ற படியினால் வாழ்க்கையின் ஆரம்பம் தொட்டு திருமணம் முடிக்கும் வரை இந்தச் சரித்திரம் இவர்களால் இவர்களை வளர்க்கின்றவர்களால் இவர்கள் வாழும் சூழலால் எழுதப்படுகின்றது. திருமணத் தம்பதியர்களில் ஒருவர் ஒருவரிடமிருந்து வித்தியாசமான குணங்களையும், வித்தியாசமான போக்குகளையும் எண்ணங்களையும், வளர்க்கப்பட்ட முறைகளையும் கொண்டிருப்பர். இச்சூழ்நிலையில் "நான்" இல் லிருந்து "நாம்" ஆக மாறுவது எவ்வளவோ கடினமானதும், தம்பதியர்களின் வளர்ச்சிக்கு ஒரு சவாலாகவும் அமைகின்றது. ஆகவே தம்பதிகள் ஆழ்ந்த நெருங்கிய உறவில் வளரவேண்டும் என்றால் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு ஒருவர் முழுமையாக மற்றவருக்கு தன்னை பகிர்ந்து அளிக்க வேண்டும். ஒருவர் ஒருவரை பொறுப்போடு ஏற்று, மதித்து வாழ்வதையும் தமது இலட்சியமாகக் கொண்டு வாழவேண்டும். உனது நிறைகளுடனும், குறைகளுடனும் பலத்தோடும், பலவீனங்களுடனும் உன்னைத் தேர்ந்து அன்பு செய்கின்றேன் என்று தம்பதியர் ஒருவர் ஒருவருக்கு தங்கள் வாழ்க்கை முறையால் சொல்லும்போது அங்கு ஆழ்ந்த நெருங்கிய உறவு வளர்ச்சி அடைகின்றது. இந்த உறவில் இன்னும் வளர ஒருவர் ஒருவருக்கு நல்ல காரியங்களில் விட்டுக் கொடுத்து, ஒத்துழைத்து வாழ வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

எமது கிறிஸ்தவ திருமணம் மற்ற திருமணங்களைப் போல் அல்லாமல் எமது அன்பராம் யேசுவின் அன்பை அடித்தளமாக கொண்டுள்ளது. யேசுவின் வாழ்வை தம்பதியர்கள் தங்கள் வாழ்வின் மாதிரிகையாகக் கொள்ள வேண்டும். எனவே யேசு எங்களை முழுமையாக நிறைவாக அர்ப்பணிப்புடன் அன்பு செய்வார். எங்களுடைய தகுதிபார்த்தல்ல அவர் எங்களை அன்பு செய்வது. எம்மை ஒரு மனிதனாக, தந்தையின் பிள்ளைகளாக மதித்து தன் இன்னுயிரை எமக்காக ஈந்தார். அதே போல திருமண வாழ்வில் தம்பதியர்களும் ஒருவரை ஒருவர் யேசுவின் மாதிரிகையைப்பின்பற்றி ஒருவரை ஒருவர் ஏற்று, மன்னித்து வாழ வேண்டும். இப்படியாக அன்றாடம் தம்பதியர்கள் வாழும்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# இளம் மொட்டுக்கள் இறையன்பில் வளர வழிகாட்டுவோம்

உலகிலுள்ள செல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வம் குழந்தைச் செல்வம் என்று ஆதி தொட்டு இன்று வரை பேசப்படுவது உண்மைச் சொல்லாகும். குழலினிது யாழ் இனிது என்பர் நம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்ற வாக்கு நம் காதுகளில் தேனாய் இனிக்கின்றது. இத்தகைய குழந்தைச் செல்வங்களைப் பெற்ற பெற்றோர் பாலூட்டி தாலாட்டி, அறிவு புகட்டி வளர்த்து ஆளாக்க பல கனவுகள் கண்டு வளர்த்து வருகின்றார்கள். நவீன உலகில் நாகரிக பண்பாட்டுக்கு ஏற்ப குழந்தை வளர வேண்டும், வாழ வேண்டும் என்று சிந்தித்தால் மாத்திரம் போதாது? அவர்கள் வளர, வாழ இன்னும் பல பண்புகள், பண்பாடுகள், அது மாத்திரமன்றி இறைவனின் அன்பிலும், ஆன்மீகத்திலும் இணைத்து வாழ வேண்டும் என்ற அவசியத்தையும் மறக்க கூடாது.

நம்பிக்கையை இழந்து, பயத்திலும், அச்சத்திலும் வாழும் குழந்தைச் செல்வங்களின் உள்ளத்தில் இறை விசுவாசத்தை ஏற்றி பெற்றோர் பெரியோரை மதித்து நடக்கும் செல்வங்களாக, ஒற்றுமையுடன் பகிர்ந்து வாழும் அன்பு உள்ளங்களாக கிறிஸ்தவ உரிமையைப்பேணிக் காக்கும் பக்தர்களாக, திகழ இவர்களை ஊக்குவிக்க இருக்கும் பாடசாலை குடும்பமாகும். இங்கு இவர்கள் ஒளியாக திகழ இன்னும் இவர்களை ஊக்குவிக்க மறைவட்ட ரீதியில் பங்கு ரீதியில் மலர்ந்து வரும் திருப்பாலத்துவ சபை இவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழி காட்டி வருகின்றது. எனவே திருப்பாலர் சபையின் நோக்கம் இச் சிறு குழந்தைகளை யேசுவின் சிறிய மறை தூதர்களாக மாற்றுவதாகும். யேசுவை ஆழமாக அறிந்து, அறியும் யேசுவின் வாழ்க்கையை வாழ்ந்து, வாழும் யேசுவின் அன்பு வாழ்க்கையைப் பிறருடன் பகிர்ந்து வாழ வழி செய்கின்றது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழிக்கு ஏற்ப எம் சிறார் உத்தம கிறிஸ்தவ மகனாக, மகளாக சிறு வயதிலிருந்து வழி காட்டப்பட வேண்டும். எனவே பெற்றோர், பெரியோர், ஆசான்கள் என்ற மட்டில் எம் மத்தியில் மலர்ந்து வரும் இவ் இளம் மொட்டுக்கள் இறையன்பில் வளர எம் முன்மாதிரிகையான வாழ்க்கையால், செபத்தால் ஒத்துழைப்பை நல்கி, இச் சிறார்களில் ஆன்மீக வாழ்க்கைக்குவழி காட்டுவோம். தாய் திருச்சபையை அன்பு செய்யும் சிறுவர்களாக யேசுவின் அன்புக் குணங்களை கொண்டவர்களாக வாழகரம் கொடுப்போம்.

உலக ரீதியில் மறையைப் பரப்பும் சிறிய தூதுவர்களாக மாறுவோம். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். எம் மத்தியில் நல் தலைவர்கள் குருக்கள், கன்னியர்கள் ஏன்? இன்னும் பல புனிதர்கள் மலர வேண்டும் என்றால் அதுவும் எம் மத்தியில் இருக்கும் இளம் மொட்டுகளில் இருந்தே மலர வேண்டும். இன்றைய சிறுவர்களாகிய நாம் எப்படி நாளைய தலைவர்களாக மாறுவோம் என்ற ஏக்கத்துடன் பாதிப்படைந்து வாழும் எம் இளம் செல்வங்களுக்கு நம்பிக்கை என்னும் விதையை விதைத்து ஒளிமயமான வாழ்வுக்கு இட்டுச் செல்ல முயல்வோம். எனவே உங்கள் அன்புச் செல்வங்களை இன்றே உங்கள் பங்கில் செயற்படும் திருப்பாலர் சபையில் சேர்த்திடுங்கள்.

... நன்றே உருவாகி என்றும்
மறைபரப்ப ...

அருட்சகோ நிர்மலா (ந. க பல்கம் இடம், கொழும்பு - )
8

# திருத்தந்தையுடன் மூன்றாம்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

னவரின் பத்தினியாகவும் கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஐந்தாவதும் இறுதியானதுமான கருப்பொருள் "இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்" என்பதாகும்.

முடிவாக யூபிலி விழாவின் பிரதான நோக்கம் பரிசுத்த திருத்துவத்தை மகிமைப்படுத்துவது எனக் கூறும் திருத்தந்தை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் தாய் திருச்சபை தொடர்ந்து வாழ மரியன்னையின் பரிந்துரையை வேண்டுமாறு அழைப்பு விடுத்து தனது சுற்று மடலை நிறைவு படுத்துகின்றார்.

இன்று இந்த யூபிலி ஆண்டு எமக்கு நிறை அருளாக அமைவது நாங்கள் அதனை வரவேற்கும் முறையிலேயே தங்கியிருக்கின்றது. "இயேசு" செய்த காட்டியவைகளை நாங்களும் செய்து, எங்கள் உள்ளங்களை அடிமைப்படுத்தியுள்ள அநீதியான மனப்பாங்குகளிலிருந்து முயன்று விடுபடுதலும், ஆதிக் கிறிஸ்தவர்கள் போல வாழ முற்படுதலும், அதனை அடிப்படையாக வைத்து அமைக்கப் பட்டுள்ள "அன்பியங்களை" எமது வாழ்வாக்க எமது உள்ளங்களை பண்படுத்த இந்தக் காலத்தை பயன் படுத்துவோமாக.

இவ்வேளையில் யூபிலியின் முன்னாயத்தங்களில் ஒன்றாக ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவை (Asian Synod) அடுத்த ஆண்டு ஓர் கலந்துரையாடலை றோமாபுரியில் நடாத்தவுள்ளது. திருச்சபையின் உயிர் நாடியாக விளங்கும் ஒவ்வொரு பொது நிலையினரதும் சமகால நிகழ்வுகளையும் அவர்களது உள்ளார்ந்த கிடக்கைகளையும், பிரதிநிதிகள் இப் பேரவைக்கு எடுத்துச்செல்வர். மாற்றங்களும், தழுவி அமைத்து புதுப்பித்தலும் இப்பேரவையின் பிரதான எண்ணமாக அமையும். ஆகவே திருச்சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் இவ் யூபிலி விழாவிற்கு தனித் தனி முறையில் ஆயத்தம் செய்யவும் எம் கருத்துக்களை இப் பேரவையின் பிரதிநிதிகளுக்கு வழங்கவும் திடசங்கர்ப்பம் கொள்வோம்.

கரவெட்டிப் பங்கின்

# திருப்பாலர் சபை ஒன்று கூடல்

"அனைவரும் இறைவழி செல்வோம்" என்ற மையப் பொருளில் நாட்டின் சமாதானத்திற்காக வேண்டிய வழிபாட்டுடன் கரவெட்டிப் பங்கின் அனைத்து ஆலயங்களும் இணைந்த திருப்பாலத்துவ சபைக்கான ஒன்று கூடல் 28-8-97 இல் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம் பெற்றது. கரவெட்டிப்பங்கின் 134 அங்கத்தினர் கலந்து கொண்ட இந்த ஒஸ்று கூடலில் அச்சுவேலிப்பங்கின் திருப்பாலத்துவ சபையினரும் இணைந்து கொண்டனர். அருள் திரு A,F பெனற் அடிகளாரும், அருள் திரு M. யேசுரட்ணம் அடிகளாரும் இணைந்து ஒழுங்கு செய்த மேற்படி நிகழ்வின் இறுதியில் சிறுவர்கள் அச்சுவேலி திருச்செபமாலை மாதா கன்னியர் மடத்தையும், புனித திரேசாள் மகளிர் பாடசாலையையும் பார்வையிட்டனர்.

செல்வி. நீ. மரீனா.
திருப்பாலத்துவ சபை செயலர்
கரவெட்டி, மாதாகோவில்.

# 'ஒன்றாக இணைந்து செபமாலை சொல்லும் குடும்பம் என்றும் ஒற்றுமையாக இருக்கும்'

— யாழ் ஆயர் —

யாழ் நகர் கோவில் வீதியில் அமைந்துள்ள செபமாலைத் தாசர் துறவற சபையினர் அருள் ஆச்சிரமத்தில் கடந்த 7/10/97 அன்று தமது பாதுகாவலி செபமாலை மாதாவினுடைய திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர். காலை 6.30 மணிக்கு ஆயரின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பலியில் அருளுரை வழங்கும் போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்து செபமாலையின் புனிதத் தன்மைகளையும் செபமாலைப் பக்தியினால் உலகு அடைந்த நன்மைகளையும் பல உண்மைச் சம்பவங்களுடன் கூறினார்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

# மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவது தொடர்பாக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் கருத்துரையாடல்

90 ஆண்டுகளுக்கு மேலாக புனித ஆசீர்வாதப்பர் ஆலயமும், 80 ஆண்டுகளுக்கு மேலாக அதை அண்டிய ஒரு பாடசாலையும் அமைந்திருந்தும், இப்பங்கு மக்களின் கல்வி நிலை திருப்திகரமாக இல்லாதிருப்பதும் பற்றி கடந்த யூன் மாதம் நடைபெற்ற பங்கு மேய்ப்புப் பணிச்சபையில் ஆராயப்பட்டது. அதன் பலனாக ஆலயத் திருநாளுக்கு ஆயத்த நவநாட்களில் ஒரு தினம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் மறையுரை ஆற்றவும், தொடர்ந்து மாணவர்களுடன் கலந்துரையாடவும் அழைக்கப்பட்டார்.

இம்முயற்சியின் தொடர்ச்சியாக செப்ரெம்பர் 14ஆம் நாள் கல்விநிலையை மேம்படுத்துவது பற்றி நடைபெற்ற கருத்துரைகள் கலந்துரையாடலில் எமது மாணவர்களும் செல்லும் அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், மேல் வகுப்பு மாணவரும் பங்குபற்றினர்.

யாழ் திருக்குடும்ப பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை வயலட் இம்மானுவேல் எமது சூழலில் கல்விநிலை வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை ஆராய்ந்தார். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருள்திரு பேணாட் ரியூஷன்களின் தேவை- நன்மை தீமைகள் பற்றி எடுத்துக்கூறினார். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அதிபர், திரு வி. மாணிக்கம் கல்வியை மேம்படுத்த பெற்றோரின் பங்களிப்பு அவசியம் என்பதனை வலியுறுத்தி கருத்துரை வழங்கினார். ஸ்ரீவிக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர், திருமதி பு. சின்னையா, மாணவரின் நலனுக்காக பெற்றோர்- பாடசாலை- ஆசிரியர் தொடர்பு எவ்விதம் அமைய வேண்டும் என்பதை விளக்கினார். இன்னும் புனித பெனடிக்ற் பாடசாலை அதிபர் அருட்செல்வி தேவநேசம் கனகரத்தின மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் திரு ஒஸ்வள்ட் திருமதி பேடினன்ட் ஆகியோரும் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைச் சுருக்கமாகத் தருகிறோம்.

பெற்றோர்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி வெளிவந்த கருத்துக்களில் சில.

★ மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய நல்ல சூழலையும் வசதிகளையும் குடும்பத்தில் பெற்றோர் உருவாக்குதல் வேண்டும்.

★ பத்திரிகை, வானொலி போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் பிள்ளைகளின் வாசித்தல், கிரகித்தல் போன்ற ஆற்றல்களை வளர்க்க முடியும்.

★ அதிபர், ஆசிரியர்களுடன் பெற்றோர் அடிக்கடி தொடர்பு கொள்ளுதல் இன்றியமையாதது.

★ மாணவர் பற்றிய பூரணமான தகவல்களை (உடல் உளரீதியானவைகள்) ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்துதல் அவர்கள் சரியான முறையில் மாணவர்களை அணுகத் துணைபுரியும்.

★ ஒழுக்கக்கல்வி, சமயக் கல்வி போன்றவற்றை வீட்டிலேயே அவர்கள் பெற முடியும்.

★ நேரசூசி தயாரித்து மாணவனை வீட்டில் படிக்க வைக்க வேண்டிய பொறுப்பும் பெற்றோருக்கே உரியது.

★ பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தல் முக்கியம். (பொய்யான மன்னிப்புக் கடிதங்கள் தவிர்க்கப் படவேண்டும்)

★ மாணவர்கள் எந்தப் பாடத்தில் குறைவாக உள்ளார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்ப ஆசிரியர்களை தெரிவு செய்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கு (ரியூசனுக்கு) அனுப்புதலே பலனளிக்கும்.

★ மாணவர்களை ஒரு இயந்திரமாகக் கருதாது அவர்களுக்கு வேண்டிய ஓய்வை (விளையாட்டு, hobby ஏற்படுத்திக் கொடுத்தல் மாணவரின் முழு வளர்ச்சிக்குத் துணைசெய்யும்.

★ ஆரம்பப் பிரிவு மாணவர்களை வீட்டில் ஆதரவு பாடங்களைக் கற்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களைப் பெற்றோர் மனதிற் கொண்டு செயற்பட்டால் சிறந்ததொரு மாணவ சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கலாம் என்ற நம்பிக்கை பிறக்கும். தொகுப்பு:

செல்வமாணிக்கம் சுபாஷினி
(ஆசிரியை)



## வாசகர் கருத்து



பாதுகாவலன் பத்திரிகைகள் கிடைத்து வாசித்து செய்திகளை அறிந்தோம். பாதுகாவலன் தரமாகவும் நிறைய செய்திகளுடனும், அழகாகவும் இப்போ வருவது பாராட்டுதற்குரியது. றோமாபுரியில் முக்கியமான சம்பவங்கள் இடம் பெறும்போது நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க செய்திகளைக் கட்டாயம் தயாரித்து அனுப்புவேன். பாதுகாவலன் பணி சிறப்புற நடைபெற வாழ்த்துக்கள்.

அருள்திரு. S. J. Q ஜெயரஞ்சன் றோமாபுரி.


*தங்கள் கருத்துக்களுக்கு நன்றி. தங்கள் படிப்புக்களின் மத்தியில் எங்களுக்கு செய்தி அனுப்ப முன்வந்தமை எமக்கு மகிழ்ச்சி தருகின்றது.* (ஆ-ர்)

★ ★ ★

என் மனம் கவர்ந்த என் இனிய பாதுகாவலனே! 94 ஆவணியில் கனடா வந்தபின் பாதுகாவலனைப் பெற்றுப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்துள்ளது. அருள்திரு. P.m இம்மானுவேல் அடிகள் நாவாந்துறையில் இருந்தபோது 150 பிரதிகள் விற்று பாதுகாவலனுக்காக உழைத்தோம். மாதமொருமுறை வந்தாலும் நீ சுமந்து வரும் அம்சங்கள் தேன் கிண்ணம்போல் சுவையாக உள்ளது. கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், மறையாசிரியர் கூட்டம், திருக் குடும்பக்கன்னியர் சபை தலைவி நியமனம், வெள்ளிவிழா நாயகன் திரு ஜெயசீலன் மாஸ்ரர், சிறப்பிதழ் தமிழ்த்தின விழாக்கள் போன்ற செய்திகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. ஒரு தெய்வ மனிதன் என்ற பாதுகாவலன் ஆசிரியரின் எம் கருத்து திருத்தந்தையின் வாழ்வு முழுவதையும் சுருக்கமாகவும், முழுமையாகவும், தெளிவாகவும் தந்துள்ளது. பாராட்டுக்கள் புதிய. ஆசிரியர் தன் பத்திரிகை அனுபவத்தினால் பாதுகாவலனின் வளர்ச்சிக்கு மென்மேலும் மெருகூட்டுவார் என்று நம்புகிறோம். பிறந்த மண்பற்றிய செய்திகளை அறியாதிருக்கும் கனடா வாழ் தமிழ் கத்தோலிக்கருக்கு ஒரு இன்ப ஊற்றாக பாதுகாவலன் அமைகிறது. பணமிருந்தும் பாதுகாவலனைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. ஏனைய பத்திரிகைகள் இங்கு வெளிவருபோல் ஏன் பாதுகாவலனும் முயற்சிக்கக் கூடாது. விடையை ஆசிரியர் பொறுப்பில் விட்டு விடைபெறும்.

திருமதி சவிரியம்மா இம்மானுவேல். கனடா.

*பாதுகாவலனைக் கனடாவில் இருந்தாலும் படிக்க விரும்புவது மகிழ்ச்சியாக இருக்கிறது. பாதுகாவலன் பல வெளிநாடுகளுக்குப் போகிறான். நீங்களும் பெற்றுக்கொள்ள முடியும் மற்றவர்களுக்கும் கனடாவில் விற்பனை செய்யமுடியும். இதுமற்றி எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.* (ஆ-ர்)



எழுத்தாளர்களே!

கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கான சிறிய, கருத்து நிறைந்த கவிதை, கட்டுரை மற்றும் ஆக்கங்களை நவம்பர் மாத இறுதிக்குள் எமக்கு அனுப்பிவையுங்கள்.

(ஆ-ர்)

## விண்ணக வாழ்வில் ஒன்பது ஆண்டுகள்



P. J. அமிர்தநாயகம்
(இளைப்பாறிய ஆசிரியர்)
(சம்பத்திரிசியார் கல்லூரி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22-02-1912 | 05-11-1988 |

இறைவா!

சிலுவையின் மறை உண்மையை நன்கு விளங்கி, வாழ்நாள் முழுவதும் தன் சிலுவையுடன் கிறீஸ்துவைப் பின் தொடர்ந்து வாழ்ந்து, எமக்கு வழிகாட்டிய உமது அடியான் P. J. அமிர்தநாயகத்திற்கு உமது பரமானந்த பிரசன்னத்தை அளித்தருளும்.

பின்வரும் ஆலயங்களில் அவரது ஆன்ம சாந்திக்காக திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப் படும்

புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நவம்பர் 5-ம் திகதி புதன்கிழமை காலை 6-00 மணி

அருள் ஆச்சிரம சிற்றாலயத்தில் நவம்பர் 5-ம் திகதி புதன் கிழமை காலை 6-00 மணி.

A/49/97 குடும்பத்தினர்

## மறைக்கல்வித் தேர்வு

யாழ் மறைகல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட யாழ்மறை மாவட்ட மறைக்கல்வித்தேர்வு 7-9-97 இல் சிறப்பாக நடைபெற்றது. ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பங்குத் தந்தையர்களுக்கு மறைக்கல்வி நிலைய இயக்குனர் நன்றி தெரிவிக்கின்றார்.

## குடும்பம் ஒரு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது ஆழ்ந்த நெருங்கிய உறவிலே நாள்தோறும் வளர்ச்சியடைகின்றனர். அப்படி வளர்ச்சியுறும் பொழுது தம்பதியர் ஒருவர் ஒருவரை நோக்கி ஆதாமின்விவிலிய அனுபவத்தை தங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். அதாவது, இவள் / ன் என் எலும்புகளின் எலும்பும் தசைகளில் தசையுமாக இருக்கின்பறாள் / ன்'' என்றும் ''இனி நாம் இருவர் அல்ல ஒரே உடல்'' என்ற விவிலிய அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளலாம். இவ்வாறு ஆழ்ந்த நெருங்கிய உறவில் தம்பதியர் வளர முடியும். இந்த வளர்ச்சி தம்பதியர் ஒருவர் இறக்குமட்டும் இருந்து கொண்டே இருக்கும்.

ஆழ்ந்த நெருங்கிய உறவிற்கு பாலியல் உறவும் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகின்றது. ஒரு குழந்தை தன் ஆரம்ப காலத்தை தன் வளர்ப்போரின் கரங்களிலே களிக்கின்றது. பெற்றோர் தாம் குழந்தையை தூக்குகின்ற, அணைக்கின்ற, முத்தமிடுகின்ற, தட்டிக்கொடுக்கின்ற தேவைகளை கவனி, கின்ற ''விதங்கள்'' வழியாக ஒரு குழந்தை பாதுகாப்பு, நம்பிக்கை என்ற இரு முக்கிய அடிப்படையான உணர்வுகளை பெற்றுக்கொள்கின்றது. பாதுகாப்பு நம்பிக்கை என்ற இந்த இரு உணர்வுகளும் எல்லா உறவுகளுக்கும் அடிப்படையாகின்றது. எனவே திருமண தம்பதியர்கள் பாலியல் உறவில் ஈடுபடுகின்ற பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் தொடுன்ற, அணைக்கின்ற, முத்தமிடுகின்ற, தட்டிக்கொடுக்கின்ற, ஒருவர் ஒருவருடைய தேவைகளை கவனிக்கின்ற ''விதங்கள்'' ஊடாக பாதுகாப்பு, நம்பிக்கை என்ற இரு உணர்வுகளும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு அணைகட்டப்படுகின்றது. இந்த ''விதங்கள்'' நல்லவைகளாக அமைந்தால் தம்பதியர் ஆழ்ந்த நெருங்கிய உறவில் வளர்வர். எதிர்மாறானவைகளாக இருந்தால் அவர்களின் உறவு சிதைவுறும்.

அருட்திரு. செ. யே. இராஜநாயகம், இயக்குனர்.
அகவொளி, குடும்ப வளத்துணை நிலையம்.
131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

## மகளே! இறை அனுபவ வாழ்வுக்கு உன்னை அர்ப்பணிக்க விரும்புகிறாயா?

செபமாலைக் கன்னியர் சபை

உன்னை அழைக்கிறது.

உன்னில், சமுதாயத்தில் இயற்கையில் உலகில் உறையும் இறைவனை உணர்ந்து உலகளாவிய உறவில் இணைந்து,

— இறைவனுக்கு மிகச் சிறந்த முறையில் மகிமையை அளிக்க நற்கருணைநாதர் முன் இரவு பகல் தொடர்பான ஆராதனை செலுத்தவும்.
— மறைந்த செபதப தியாக வாழ்வினால் உலகினரின் பொருட்டுப் பரிந்துரைக்கவும்,
நசரேத்தில் மரியன்னை வாழ்ந்த வாழ்வைத்
— தொடரவும்.

செபமாலைக் கன்னியர் சபை உன்னை வரவேற்கிறது.

தகமை : O.L. சித்தியடைந்திருக்க வேண்டும்.
விபரங்களுக்கு
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி,

இறை அழைத்தல் ஊக்குனர்
செபமாலைக் கன்னியர் சபை
23, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
Rev. Mother John Baptist Rosarian convent,
35/36 Duwana, Kochchicadai

A/33-97

அர்ப்பண வாழ்வில்
## வெள்ளி யூபிலி விழா
**1972.10.07 – 1997.10.07**



அருட்சகோதரி
**மேரி புஸ்பராணி** A.C
கார்மேல் மடம்-கல்முனை
''ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது''
(திரு.பா. 84 : 1)

வெள்ளி விழா நாயகியே! உன்
அள்ள அள்ளக் குறையா
அன்பும் கனிவும்
ஆண்டவன் சேவையும்
இன்று போல் என்றும் தொடர
ஆசிக்கின்றோம்.
மனமார வாழ்த்துகின்றோம்.

சகோதரர்களும், உறவினரும்
நெல்லியடி,
கரவெட்டி. A/48/97

## ஐ. நா. மனித...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும். இத்தகைய உரிமைக ளின் பட்டியல் நீடிக்கப்பட வேண்டும்.

★ இவ்வாறு, கைது செய்யப் படுதல், தடுப்புக்காவலில் வைக் கப்படுதல், முறையான விசா ரணை போன்றவை சம்பந்த மான உரிமைகள், மேற் கூறப் பட்ட பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

★ தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருப்போரை, மருத்துவ அதிகாரி காலத்துக்குக் காலம் (உ-ம்) இரு வாரங்களுக்கு ஒரு முறை சந்திக்க ஏற்பாடு செய் யப்பட வேண்டும்.

இதனால், அவர்கள் மனி தாபிமான முறையில் நடத்தப் படுகிறார்களா, சித்திரவ தைக்கு உள்ளாக்கப்படுகிறார் களா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

★ இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பயங்கரமான அள வுக்கு இடம்பெற்று வருவதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக் குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இலங்கையில் தரித்து இருக்கவேண்டும்.

## வெள்ளிவிழா நாயகர்களை வாழ்த்துகிறோம்



அருள்திரு
**T. E. தேவராஜன்**

பிறப்பு: 10 . 12 . 1944
குருத்துவம்: 19 . 10 . 1972

பணிகள்

1972 – உதவிப் பங்குத்தந்தை யாழ்ப்பாணம்
1973 - 1975: பங்குத்தந்தை நாரந்தனை
1975 - 1977: உப அதிபர் புனித பத்திரிசியார் கல்லூரி
1977 - 1980: பங்குத்தந்தை முருங்கன்
1980 - 1987: பங்குத்தந்தை மயிலிட்டி
1987: வெளிநாடு




அருள்திரு
**யேக்கப் நிக்கலஸ்**

பிறப்பு: 15 . 8 . 1945
குருத்துவம்: 19 . 10 . 1972

பணிகள்

1972: உதவிப் பங்குத்தந்தை நாரந்தனை
1973 - 1974: பங்குத்தந்தை தலை மன்னார்
1974 - 1976: பங்குத்தந்தை வவுனியா
1976: NBCLC கல்வி-இந்தியா
1977: மறைக்கல்வி நிலைய இயக்குனர்
1987: உயர்கல்வி, உரோமாபுரி
1987 - 1989: புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
1989: திருவழிபாட்டு நிலைய இயக்குனர்
1993: O.L.R
1996: புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி



அருள்திரு
**S. எட்வின்**

பிறப்பு: 12 . 10 . 1946
குருப்பட்டம்: 19 . 10 . 1972

பணிகள்:

1972 - 1973: உதவிப் பங்குத் தந்தை கிளிநொச்சி
1973 - 1974: உதவிப் பங்குத் தந்தை யாழ். பேராலயம்
1974 - 1978: பங்குத்தந்தை பண்டிவிரிச்சான்
1978; பங்குத்தந்தை அடம்பன்
: உயர்கல்வி
1984: புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
1997; உயர் கல்வி, றோமாபுரி
: புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

## எனது பாடசாலை
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோடு நீங்கள் கல்வி கற்பிக்க வேண்டும் என்று ஆசிரியர் களையும் அன்பாகக் கேட்டுக் கொண்டார்.

கடந்த 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இவ் விழாவில் முன்னதாக கல்வி என்னும் ஒளியை மாண வர்கள் மத்தியில் பிரகாசமாக ஒளிர்விப்பதற்கு அடையாள மாக ஆசிரியர்கள் மெழுகுவர்த்தியினை ஏந்தியவண்ணம் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அருள் தந்தை ஆனந்தகுமார் அடிகளாரால் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இப் பலியில் இந்து சமய ஆசிரியர்களும் மாணவர்களும் பக்தி உணர்வுடன் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

திருப்பலியின் பின்னர் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் உரையாற்றும் போதே அருள் தந்தை மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருள் திரு சாள்ஸ் கொலின்ஸ். அடிகளாரும் ஆசிரியர்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினார். இப்பாடசாலையில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி பயிலும் மாணவர்களும் பழைய மாண வர்களும் பெற்றோரும் ஆசிரியர்களுக்கு தங்கள் வாழ்த்துக் களையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

— பி. றெஜிஸ் நியூட்டன். —

## கிறிஸ்தவ நாகரிகத்துறை..
(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத் திருச்சபையும் சுவாமி ஞானப்பிரகாசியாரின் மறைப்பணியும்'' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுக்கே இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. ஆங்கிலத்தில் இவர் மேற்கொண்ட ஆய்வானது நூல் வடிவம் பெற்றுள்ளது தெரிந்ததே.

யாழ்ப்பாண இடம் பெயர்வின் பின் ஏற்பட்ட இக்கட் டான கால கட்டத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையைப் பொறுப் பெடுத்துப் பாதுகாத்த கலாநிதி S. சிவலிங்கராஜா அவர்க ளிடமிருந்து அருள்திரு அன்ரன் மத்தாய்ஸ் அடிகள் பொறுப் புக்களைக் கையேற்றுள்ளார். கலாநிதி S. சிவலிங்கராஜா அவர் களின் பொறுப்பான பணிக்காகக் கிறிஸ்தவ உலகம் என்றும் அவரை நன்றியோடு நினைவுகூரும்.

அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளின் பணி சிறக்கப் பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரி விக்கிறோம்.

## தென்னிந்திய...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 14.10.97 செவ்வாய் காலை மானிப்பாயிலுள்ள பேராயர் இல்லத்தில் யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் அஞ் சலிக்கூட்டமும், புதன் காலை வட்டுக்கோட்டை தென் இந் திய பேராலயத்தில் இறுதி ஆராதனையும் இடம்பெற்று உடுவில் தென்இந்திய பேராலய வளாக சேமக்காலையில் நல்ல டக்கம் செய்யப்பட்டது.

## முகமாலை...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்மைப்பார்த்து அதே அழைப் பைவிடுக்கிறார். கடந்த வரு டம் நாம் இவ்விழாவை சிறப் பாகக் கொண்டாட முடிய வில்லை. ஆனால் மீண்டும் இம்முறை இதை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு இறைவன் எமக்கு சந்தர்ப்பத்தை அளித் திருக்கின்றார்'' எனக்குறிப் பிட்டார்.

திருநாள் ஆயத்தகாலங்களில் மறையுரையாற்றிய அருள்திரு யோகராசா அ. ம. தி. கிறிஸ் தவ விழுமியங்களை தெளி வாக எடுத்துக்கூறி இறையுற வில் வளர வழிகாட்டினார்.

திருநாட்திருப்பலியில் ஆய ருடன் சேர்ந்து அருள்திரு பீற்றர் துரைரட்ணம், அருள் திரு செபஸ்தியன் குருஸ், அருள்திரு யோகராசா, பங்குத் தந்தை அருள்திரு A. P. அன்ரனிப்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மறையாசிரியர்
செல்வி. S. இதயநிர்மலா

## புனித பத்திரிசியார் கல்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரிதும் வேதனைக்குரிய நிகழ்வாகும். கத்தோலிக் கத்தின் கல்விப்பணியின் ஓர் அடையாளம் தான் புனித பத்திரிசியார் கல்லூரி.

இப்பரிசளிப்புவிழா யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடைபெறும் கல்விப் பணியின் ஒரு பசுமையான அடை யாளம் என்பதில் ஐயமில்லை. எத்தகைய துயர சூழ் நிலையிலும் யாழ்ப்பாணம் எழுந்து நிற்கும் என் பதையே இவ்வடையாளம் எடுத்துக்காட்டுகிறது. 2வது உலக மகாயுத்தத்தின் போது சின்னா பின்ன மாக்கப்பட்ட ஜேர்மனையே யாழ்ப்பாணம் ஒத்திருக்கின்றது. இது வெறும் புகழுரை அல்ல. அமெரிக்காவின் அணுகுண்டுக்கு தன் தேசத்தின் இரு பெரும் நகரங்களைப் பறி கொடுத்த யப்பான் இன்று தொழில் துறையில் அமெரிக்காவிற்கே சவால் விடுக்கின்றது. இந்த உலக வரலாற்றின் நிகழ்வுகளெல்லாம் நமக்கு உந்துசக்தியாகவே அமைய வேண்டும் என்றார்.

## யாழ் மறைமாவட்ட..,
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு ஒருவரை இன்னும் ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் ஊக்கப்படுத்துதல் என்றுதான் நாம் அர்த்தம்கொள்ள வேண்டும். இன்று கல்விகற்கும் மாணவியராகிய நீங்கள் கல்விமான்களும் அறிஞர் களும், நிறைந்த ஞானபூமி இது என அறிந்து இன்றைய வேதனையான சூழ்நிலையிலும் உழைப்பே உயர்வுதரும், முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என கடினமாக உழைக்கவேண்டுமென நாம் வற் புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம். அறிவியல் தொழில்நுட்பத்துறையில் மாணவியரின் எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்தக் கூடிய வாழ்க்கையில் எழும் எந்த சவால்களையும் சமாளிக்கக்கூடிய கல்வித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் அவசியம் என்றார்.

## ஒன்றாக இணைந்து செபமாலை...
(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவிழாவிற்கு ஆயத்த நவநாட்கள் மூன்று தினங்கள் இடம் பெற்றன. இவ் வழிபாடுகளி லும் திருவிழாப் பலியிலும் பெருந்திரளான மக்கள் கலந்து அன்னையின் ஆசீரைப் பெற்றனர். அருள் ஆச்சிரம அதிபர் அருள்திரு பிரான்சிஸ் ஜெயம் அடிகளார் விழா சிறப்புற உத விய அனைவருக்கும் பலி நிறைவில் நன்றிகளைத் தெரிவித்தார்.

★ இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் (எபி. 13 : 8) ★

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல P 193

# மனுவுருவெடுத்த மாபரன்

"கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்." இது பல வருடங்களுக்கு முன்னர், சினிமாவுக்காக கவிஞனால் இயற்றப்பட்ட மிகப் பிரபல்யமான பாடலாகும்.

இப்பாடல் இயற்றப்பட்ட அன்றைய பின்னணி, வேதனைகளைத் தாங்கமாட்டாத மனிதனுக்காக, சோதனைகளை எதிர் கொள்ளத் தயங்கும் மனிதனுக்காக, அவலங்களால் கலங்கிப் போனவனுக்காக, அழிவுகளால், இழப்புக்களால் நொடித்துப்போன மனிதனுக்காக ஆறுதல் படுத்தும் படியாக எழுதப்பட்ட பாடலாகும். அதாவது கடவுள் மனித வடிவம் எடுத்தால் தான் அவருக்கும் மனித கஸ்டங்கள், துன்பங்கள் விளங்கும் என்பதற்காக எழுதப்பட்டு பாடப்பட்ட பாடலாகும்.

ஆனால் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இறைவன் மனிதனானார். கடவுள் மனுக்குலம் மீது கொண்ட அன்பினால், தமது மீட்புத் திட்டத்திற்கு ஏற்ப தம் ஒரேபேறான மகனை பெண்ணின் வயிற்றிலிருந்து மனித உருவெடுத்து, வடிவெடுத்துப் பிறக்க வைத்தார்.

"வார்த்தை மனுவுருவானார்." மார்கழி மதியில் மாமரி மடியில் மாகுளிர் வேளையில் மானிடர் எமக்காகப் பிறந்தார். மக்கள் குலம் விடுதலை பெறவேண்டும், பாவ அடிமைத் தனத்திலிருந்து மீட்படைய வேண்டும் என்பதற்காக மானிடவேடம் கொண்டார்.

அன்று அவர், அக்கால மக்களுக்கு கொண்டு வந்த பரிசு, சமாதானமாகும். இன்றும் எம் எல்லோருக்கும் வேண்டும் பரிசு சமாதானமாகும், அன்று மக்கள் அடிமைகளாக, அகதிகளாக நாடு, வீடுகள் விட்டு அலைந்து திரிந்தார்கள். உரிமை வாழ்வை விட்டு நிலை குலைந்தார்கள், ஆனால் இன்றும் அதே நிலை, உரிமையில்லை, உறக்கமில்லை, நாடு விட்டு வீடு விட்டு, காடு கண்டு குடில் அமைத்து குமுறும் நெஞ்சத்தோடு, எரியும் மனத்தோடு அலைந்து, உலைந்து உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, உறங்க இடமின்றி, உரிமை என்று கூற எதுவுமின்றி வேதனையோடு வாழ்கிறார்கள்.

இக்கால கட்டத்தில் மீண்டும் ஒரு கிறீஸ்து பிறப்பு. இக்கிறீஸ்து பிறப்பு உடைந்து போன, நொந்து நொடிந்து போனஉயிர்களை, உடமைகளை, உறவுகளை, உரிமைகளை இழந்து போன உள்ளங்களுக்கு ஊட்டம் அளிக்கும் விழாவாக அமைய வேண்டும். அன்று கிறீஸ்து உலகிற்குக் கொண்டு வந்த சமாதானம், இன்று எங்களுக்கு, எம் மக்களுக்கு அவசரம் தேவையான சமாதானமாக அமைய வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக ஏங்கித் தவிக்கும் எங்களுக்கு, நிரந்தரமான சமாதானமாக மாற வேண்டும். இழந்த உறவுகள், பிரிவுகள் மீண்டும் இணைக்கப்பட வேண்டும். இவ்விடம் விட்டுப் பிரிந்தவர்கள், தம்மிடம் மீண்டும் நாடவேண்டும். அகதி வாழ்வு, அலைச்சல் வாழ்வு, அமைதி வாழ்வாக மாற வேண்டும். கண்ணீர் வாழ்வு பன்னீர் வாழ்வாக கமழ வேண்டும்.

மோ. தார்சீசியஸ் (கொழும்பு)

# கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு விடுக்கும் சவால்

"வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார்" அருளப்பர் (1:14)

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிறைவேறிய வாக்கு இது. கடவுள் மனிதனை எவ்வளவோ அன்பு செய்தார். தேவையான அனைத்தும் தந்தார். ஆனால் மனிதனோ பதிலன்பு செலுத்தவில்லை. இதனைக் கண்ட கடவுள் மனிதனோடு நெருக்கமாக பழக வேண்டும், அன்பைப்பெற வேண்டும் என்றால் இதற்குரிய ஒரே வழி கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும். மானுட மகனாக வேண்டும், ஊனுடலை ஏற்க வேண்டும் என்று விருப்பம் கொண்டார்.

அவர் திட்டமிட்டார், தன் திட்டத்தை செயலாக்கினார். ஒரு தேசம், ஒரு பட்டணம், ஒரு ஊர், ஒரு இடம் ஒரு கோத்திரம், ஒரு குலம், ஒரு குடும்பம் ஒரு பெண் என அனைத்தும் அவரது தேர்வுக்குள் ஆயத்தமாகின. "இருளில் நடந்து வாழ்ந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல்படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று" என்று முன்னுரைத்த இறைவாக்கு நிறைவேறியது. இறைமகன் கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தார். அன்று முதல் இன்று வரை கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் கொண்டாடுகின்றோம். அதுவும் மிகுந்த ஆடம்பரத்தோடு பட்டுடுத்தி பலகாரம் செய்து புத்தம் புதுப் பொலிவுடன் பட்டாசு கொழுத்தி கொண்டாடுகின்றோம். ஆனால் அவர் இவ்வுலகிற்கு வந்த நோக்கத்தை அவரது வாழ்க்கை முறையை அவரது வார்த்தைகளை எங்கோ ஒரு மூலையில் ஒதுக்கி வைத்து விட்டு நாம் கொண்டாடுகின்றோம்.

"எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும் கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும், அழுகிறவர்கள் அனைவருக்கும் ஆறுதல் அளிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார்" என்ற இசையாஸ் இறைவாக்கினர் முன்னுரைத்த வார்த்தைகளை கூறியே கிறிஸ்து தமது பணியை ஆரம்பிக்கின்றார். அவ்வார்த்தைகள் அவரில் நிறைவேறுகின்றது.

அம்புறோஸ் பீற்றர்
கொழும்பு 13.

அவர்பிறப்பின் மூலமாக மட்டுமல்ல, தன் வாழ்க்கையின் வழியாகக்கூட எளியோரை, வறியோரை, அகதிகளை, அனாதைகளை அடிமைப்படுத்தப்பட்டவர்களை அன்புக்காக ஏங்கியவர்களை தேடி ஓடி அவர்களிடம் அன்பையும் பாசத்தையும் அளவில்லாமல் பொழிந்தார். பாமரர்களை அழைத்தார். பாவிகளைத் தேடிவந்தார். அன்பு செய்ய ஆள்இல்லாமல் துன்பத்தில் துவண்டு கொண்டிருந்தவர்களை அணைத்தார். ஆனால் கிறிஸ்மஸ் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் மத்தியில்தான் எத்தனை பிரச்சனைகள். பிரிவுகள் பிளவுகள். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகள். இறைமகன் கிறிஸ்துவே தன் இறைத்தன்மையை விடுத்து பாவிகளாகிய நம்மை நாடி, தேடி, ஓடி வந்து நம்மிடையே குடி கொண்டார் என்றால் நம்மிடம் மட்டும் ஏன் இத்தனை வேறுபாடுகள்?

கிறிஸ்து இவ்வுலகிற்கு தான் வந்த நோக்கத்தை இம்மியளவும் பிசகின்றி நிறைவேற்றினார். கிறிஸ்துவைப் பின் செல்லும் நாம் கிறிஸ்மஸ் கொண்டாடும் நாம் நம் முன் வைக்கப்பட்டுள்ள சவாலை ஏற்க வேண்டும். மனிதர்கள் யாரும் தாழ்ந்தவர்கள் அல்ல. எல்லோரும் அன்பு செய்யப்பட வேண்டியவர்கள். இதில் வடக்கு தெற்கு என்றோ கிழக்கு மேற்கு என்றோ பிரித்து பார்க்க இடமில்லை. ஆண்டவர் தந்த அனைத்தையும் சமமாகப் பகிர்ந்து வாழ்வதே எமது கடமையாகும். இந்த சவாலை ஏற்று வாழும் போதுதான் கிறிஸ்து பிறப்பு விழா அர்த்தம் உள்ள விழாவாக மாறும். மனிதனை ஏற்று மனித மாண்பை மதித்து வாழ்வதே நமது அழைத்தல் ஆகும். எனவே கிறிஸ்துவின் நோக்கத்தையும் அவர் நமக்கு தந்த நம்பிக்கை அன்பு சமாதானம் என்னும் பண்புகளையும் நம் உள்ளத்தில் பதித்து அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவோமாக.

## எம்மினிய பாலகனே!

அகிலமெல்லாம் உய்விக்க
ஆண்டவராய் வந்தவரே
இறையருளை எம்மவர்க்கு
ஈசனிடம் பெற்றுத்தர
உலக மாந்தர் நாமெல்லாம்
ஊக்கமுடன் உமைநாட
எந்நாளும் எம்மிடையே
ஏற்றமுடன் எழுந்தருளி
ஐயங்களை நீக்கி வைத்து
ஒளிபெற்ற வரங்களை
ஓங்காரமாய்த் தந்தருள
ஔடதமாய் எழுந்து வாரும்
எம்மினிய பாலகனே!

சி. நிசாந் 6A
யா/மத்திய கல்லூரி,



இலங்கை மண்ணில்
அமைதியும் சமாதானமும்
எப்போ நிலவ அருள்வாய் !
கன்னி ஈன்ற மகனே !
அடுத்த ஆண்டிலா ?

## ஒற்றுமைக்குக் கைகொடுப்போம்

மரண ஓலங்கள் இன்னும் மாறவில்லை
அமைதியின் சுருதி இன்னும் குறையவில்லை,
அகோர வெயிலடித்தும் இன்னும் எம் நிலத்தின்
இரத்தக்கறை காயவில்லை.
பாரம் சுமந்த தோள்கள் இன்னும் சுமையுடனே அலைகின்றன.
வீசுகின்ற தென்றல் எமக்குப் புயலாகவே புரிகின்றது.
எறிக்கின்ற நிலா எமக்கு வெயிலாகவே எறிக்கின்றது.
ஏன் பொழிகின்ற மழை கூட வெந்நீராகவே சுடுகின்றது.
ஏனென்றால் எவற்றையுமே உணரமுடியாத அளவிற்கு
மரணம், இழப்பு, துன்பம், பிரிவு என்ற
பொல்லாத வேட்டுக்களால்
எம் பொன்னான இதயங்கள் துளைபோடப்பட்டுவிட்டன.
மீண்டும் ஒரு இனம் இங்கு மாண்டுகொண்டிருக்கின்றது.
இன்னுமொரு இஸ்ராயேல் இனம் இறைவனைத் தேடுகின்றது.
ஆம், சமாதானத்தை தேடி நிற்கும் எம் சனங்களிற்கு
சாக்கடையிலே சந்தன வாடையைத் தேடும் அரசியல்
சமாதானம் தரமாட்டாது.
இதோ எமக்கு அமைதி கொணர்ந்து விட்டார்
ஒரு அரசபாலகன்.
"இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்.
மரணநிழல்படும் நாட்டில் உள்ளோர்க்கு
ஒளி உதித்துச் சுடர்வீசிற்று." (இசை. 9 : 2)
புதிய கிறிஸ்மஸ்சில் ஒற்றுமையாய் வாழ
ஒளியின் பாதையில் நடப்போம்,
ஒற்றுமைக்குக் கை கொடுப்போம்.
"எங்கட அழிவுகளுக்கும்
எங்கட விடுதலைக்கும்
நாங்களே பொறுப்பு"
விடுதலைக்காக புதிய ஆண்டில்
கைகளை இணைக்க
**வாழ்த்துகின்றோம்.**

ம. வி. தயாகரன்
பண்டத்தரிப்பு

# ஆயரின் கிறிஸ்மஸ் வாழ்த்து

**ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாக்காலத்தில் வன்செயல்களைக் களைந்து பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை அடைய முடியும் என உறுதியாக நம்புகிறோம்.**



பாதுகாவலன் பத்திரிகையின் கிறிஸ்மஸ் சிறப்பு இதழுக்கு கிறிஸ்மஸ் செய்தியும் வாழ்த்துக்களும் தருவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

கிறிஸ்மஸ் நம்பிக்கையின் விழா. சமாதானத்தின் விழா உலகிலே நன்மனதுள்ளவர்க்குச் சமாதானம் உண்டாகுக என்ற வானவர் கீதம் இந்த சமாதானத்தின் செய்தியைத் தான் எமக்கு எப்போதும் அறிவித்துக் கொண்டே இருக் கிறது.

இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்து சுடர் வீசிற்று என்ற இறைவாக்கினர் இசையாசின் (9:2) வார்த்தைகள் எமக்கு நம்பிக்கையை இன்னும் ஊட்டுகின்றன.

எமது மக்கள் எல்லோரிற்கும் இன்னும் சமாதானம் ஏற்படவில்லை. இங்கும், வன்னிப்பகுதியிலும் இன்னும் மக்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

புனிதவளனார் கத்தோலிக்க அச்சக முகாமையாளர், பணியாளர், பாதுகாவலன் வாசக அன்பர்கள், நலன்விரும்பிகள் அனைவர்க்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களும் ஆசீர்களும்.

† தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

## யாழ் குருமுதல்வரின் வாழ்த்து



இன்று உலக அரங்கில் 41 உள்நாட்டு வெளி நாட்டு யுத்தங்கள் நடை பெறுகின்றன. 17 ஆயுதம் ஏந்திய இயக்கக் குழுக்கள் போராடுகின்றன. இவை எல்லாம் உலக சமாதா னத்திற்கு பெரும் சவா லாக அமைந்துள்ளன. இறை இயேசு அறிவித் திருந்த உலக முடிவில் நடக்கும், போர்கள் அழிவு கள் வந்து விட்டதோ என எண்ணிப்பயப்படவேண்டி இருக்கின்றது.

ஆனால் இயேசு பாலகன் அமைதியின் அரசன், தன் சமாதானத்தையே எங்களுக்கு வாக்களித்திருக் கிறார். என்னில் நீங்கள் சமாதானத்தைக் கண்டடை யும்படி இது எல்லாம் நான் உங்களுக்கு சொன்னேன். உலகில் உங்களுக்கு வேதனை உண்டு. ஆனால் துணி வுடன் இருங்கள், நான் உலகை வென்றுவிட்டேன் (யோ. 16 : 33).

அவரின் வார்த்தையில் விசுவாசம் கொள்ளும் நம் ஒவ்வொருவரிலும் அமைதியும் மன்னிக்கும் மன நிலையும் பெருகட்டும். எல்லாவித மனத்தாங்கல்களை யும் அகற்றி அன்புவாழ்வை அனைவரிடமும் பகிரும் ஆர்வத்தை அருளட்டும்.

அனைவருக்கும் 1997ஆம் ஆண்டின் நத்தார் வாழ்த்துக்களையும் 1998ஆம் ஆண்டு புதுவருட வாழ்த்துக்களையும் கூறி நிற்கின்றோம்.

அருட்திரு J. P. E. செல்வராஜா
குருமுதல்வர்

## வெண்புறாவாய் வருவாய்!



வெள்ளைப் புறாவே 'விண்வேந்தன் மகன்'
கள்ளம் இல்லாத கண்மணியே!
துள்ளிப் பறந்து என் கையில் வருவாயோ?
உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி நான் சொல்ல

காலையில் போனவர் மாலையில் திரும்பவில்லை
சாலையில் பிணமாகக் கிடக்கின்ற நிலை கண்டோம்.
காணாமற் போனவர் தகவல் தெரியவில்லை
கைதாகிப் போனவர்க்கு விடுதலை இன்னும் இல்லை.

வேலையோ இல்லை என்று விரக்தியில் நம் இளைஞர்
வீதியில் அலைகின்றார் வேதனையால் தவிக்கின்றார்.
போதையோ அவர் வாழ்வை முடித்திடும் கொடுமை கண்டு
பேதைபோலிருந்து பெற்றவர் வாடுகின்றார்.

வன்னிமக்கட்குணவில்லை வருவதற்கும் பாதையில்லை
சன்னிவந்து அவர் சாக என்ன விழா இங்கெமக்கு?
கன்னி ஈன்ற பாலகனே! கண்கலங்கி அழுகின்றோம்.
இன்னமும் ஏன் மௌனம்? ஈழத்தோடென்ன கோபம்?

கண்திறந்து நீ பார்த்தால் கண்ணீர் பறந்தோடும்
விண்திறந்து நீ வந்தால் விடியல் விரைந்து வரும்
மண் அதிரும் யுத்தங்கள் மாயமாய் மறைந்தொழியும்
வெண்புறாவாய் வருவாய் அமைதியை நீ தருவாய்!

" நவாலியூர் நாயகி "

## தெய்வீகக் காட்சி

✻ சுவாமி ஜிவாபோஸ்

பல்லாண்டு பல்லாண்டு
பாலைவனம் போலிருந்த
எல்லாமும் இழந்துவரும்
இஸ்ரேலை வாழவைப்பாய்
என தாலேலோ பாடும் கவி ஞர் கண்ணதாசன் கிறிஸ்து பாலகன் பிறப்பின் கார ணத்தை "இயேசு காவியத் தில்" வடிக்கிறார்.

பல்லாண்டு காலமாகச் சேர்த்து வளர்த்த செல்வங்கள் கரையுண்டு, இளமையின் கனவு கள் மறைந்து, நீண்ட உயர் பண்பாட்டு மதிப்பீடுகள் மங்கி, முடியாத பெருமூச்சுக்களோ டும் நடைப் பிணங்களான எம் மக்கள் யாத்திரை தொடரும் காட்சி இன்று தோன்றுகின்றதே.

மறுபுறம், அமைதிக்கு வழி யுத்தமே என்ற விருதுகளோடு ஆட்சேர்ப்புக்களும், இதோ இங்கே! அதோ அங்கே! அமைதி, வெற்றி, புனரமைப்பு சகஜவாழ்வு உள்ளும் புறமும் மக்களை ஏமாற்றும் சாக்கடை அரசியல் வாதிகளின் காட்சி யும் தோன்றுகின்றதே.

**இயேசுவின் பிறப்பு வெறுமனே வரலாற்று செய்தி கூறி வீணாகக் காலத்தைக் கழிக்கும் கழியாட்டமாகக் கூடாது.**

சோலைவனங்கள் பல பாலை வனங்களாகி விட்ட காட்சி இன்று தோன்றுகின்றதே.

உடல் சோர்ந்து, உளம் நொந்து, ஈர விழிகளோடும், வாழ்வின் சுமைகளைத் தாங்க



பாலைவனம் போல தனித் திருந்த மக்களுக்கு இறை வாக்கினர் எசாயா இடியாக முழங்கினார். "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளி யைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்த நாட்டில் குடி யிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது".

தெய்வம் குழந்தையானது, ஆண்மகவு ஒன்று நமக்கு தரப் பட்டுள்ளார். அமைதியின் அரசர் என்ற திருப் பெயர் கொண்டு, நீதியோடும் நேர்மை யோடும் ஆட்சி செய்து அதை நிலைநாட்ட வந்துள்ளார்.

தாகவேட்கை தணியாத வேளையில்தான் அருந்தும் நீரின் சுவை இன்னும் அருமை யாகின்றது. இருளின் கருமை யும் காலமும் நீள்கின்றபோது தான் ஒளியின் குளிர்மை கண்கொள்ளாக் காட்சி யாகிறது.

யுத்தத்தின் அழிவில்தான் அமைதியின் விடியல் இனிமை யான விடியலின் பூபாளமா கிறது.

( தொடர்ச்சி IVஆம் பக்கம்)

## அன்றும் இன்றும் அகதிகள் வாழ்வில் கிறிஸ்து

- மரியா அபிலாசினி -
கொழும்பு 13

மார்கழி மாதம் பிறந்து விட்டால் மீண்டும் கிறிஸ்மஸ் விழாவின் களையும் பிறந்து விடுகின்றது. எத்தகைய இன் னல்கள் மத்தியில் வாழ்ந்தா லும், 'கிறிஸ்துவின் பிறப்பு' மக்களின் மத்தியில் புத்துணர் வையும் வளரும் சிறார்கள் மத் தியில் குதூகலத்தையும் ஏற் படுத்துகிறது.

ஆனால் இன்றைய சூழ் நிலைகளால் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் நிலையும், மீளக்குடியேறிய நிலையும், இழப்புகள் இன்னல்கள் கார ணமாக கடுந் துயரத்தைக் கொண்டிருந்தாலும் கூட கிறிஸ்துவின் பிறப்பால் மாற் றம் ஏற்படுத்தியுள்ளதையும் மறுப்பதற்கில்லை. அதே வேளையில் அகதிகள் வாழ்வில் கிறிஸ்து வாழ்கின்றார் என்ப தும் மறுக்கமுடியாத உண்மை யாகும்.

வேதாகமத்தில் பழைய ஏற் பாட்டிலும், புதிய ஏற்பாட்டி லும்கூட இன்றைய சூழ்நிலை கள் இரண்டாயிரம் ஆண்டை அண்மித்தபோதிலும் ஒன்று டன் ஒன்று பின்னிப்பிணைந் துள்ளதை ஆழ்ந்து சிந்தித் தால் விளங்கிக் கொள்ளலாம்.

கிறிஸ்துவின் பிறப்பை எதிர் நோக்கியிருந்த மரியாளும், சூசையும் குடிசனமதிப்பைக் கொடுக்க, தாம் வாழ்ந்த இடத்தை விட்டு வெளியேறி பெத்திலேகம் சிற்றூருக்கு வந்தபோது, தங்குவதற்கு இடமின்றி அலைந்து திரிந்த னர். நிறைமாதக் கர்ப்பிணிக்கு மாட்டுத் தொழுவமே இறுதி யில் தஞ்சம் அளித்தது. மூவி ராசாக்கள் வருகையின் பின்பு, ஏரோதரசனுக்கு அஞ்சி இரவோடு இரவாக எகிப்து நாட்டுக்குச் செல்ல பணிக்கப் பட்டார்.

அவ்வாறே பழைய ஏற் பாட்டில் நோவா நாற்பது

( தொடர்ச்சி IVஆம் பக்கம் )

# அமலமரித் தியாகிகள் யாழ் மாகாண முதல்வரின் ஆசிச்செய்தி



அமலமரித் தியாகிகள் ஈழ மண்ணிலே காலடி எடுத்து வைத்து 150 ஆண்டுகள் நிறைவின் மகிழ்ச்சியில் அழிந்திருக்கும் யாழ்—மாகாண அமல மரித்தியாகிகளுடன் இணைந்து குடிலில் பிறந்திருக்கும் அவதார—புருசனை உற்றுநோக்குகின்றோம்.

விண்ணகம் துறந்து, மண்ணகம் குடிபுகுந்த இறைமகன் இயேசுவின் அவதார—விழாவில் தெய்வீக அன்பின் மறை பொருளைப் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றோம்.

'மனித இலட்சியங்களையும் உணர்வுகளையும், தேவைகளையும், மனிதத்தையே தன்னகத்தே உள்வாங்கிக் கொண்ட தெய்வத்தின் செயல் அவர் புரிந்த தியாகச் செயல் என்று கூற வேண்டும். ''தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலிப்பியர் 2:7).

கிறீஸ்துவின் கீழ்ப்படிவும் தாழ்ச்சியும் மனித சிந்தனைக்கு பெரும் வியப்புத்தான்.

இறையரசைக் கனவாக்கி விடுதலை வாழ்வைத் தன் பணியாக்கித் தன் வாழ்வை முழுமையாக ஈகை செய்த இறை வள்ளல் இயேசு தனி ஓர் ஆள் மட்டுமல்ல, அவர் இறை அரசின் தனிப் பெரும் இயக்கம் என்றே கொள்ள வேண்டும்.

ஆண்டவர் இயேசுவின் அடிச் சுவடுகளைப் பின் தொடர்ந்து, ஏழைகளுக்கு நற்செய்தி என்ற விருது வாக்கை சிரமேற் கொண்டு, தம் தாய் நாடு சுற்றம் சுகம் பல துறந்து எம் மண்ணிலே அவதார—புருஷராக அடியெடுத்து வைத்த அமல மரித் தியாகியாக — மிஷனரிமாரின் தியாகம் வியப்புக்குரியது.

**ஆண்டவர் யேசு நாடு, மொழி, நிற இன பேதமின்றி அனைத்து மக்களினதும் உள்ளங்களிலும் குடில் கொள்ளத் துடிக்கிறார்.**

குடிலைத் தன் கோவிலாக கொண்ட அமைதியின் ஆண்டவர் இயேசு நாடு, மொழி, இன பேதமின்றி அனைத்து மக்களினதும் உள்ளங்களிலும் குடி கொள்ளத் துடிக்கிறார்.

இந் நற் செய்தியின் தூதுவராக தியாக நெறியிலே நாமும் முன்வரவும் உழைக்கவும் எமது உள்ளங்களில் புத்துணர்வையும் அருளையும் இறைமகன் இயேசு பிறப்பிப்பாராக.

அருட்திரு பிலிப் யேசுநேசன்
அ.ம.தி
முதல்வர், யாழ்—மாகாண
அமல மரித் தியாகிகள்,
தொடர்பகம்— யாழ்ப்பாண

# செபமாலைத்தாசர் சபை இலங்கை மாகாண முதல்வரின் ஆசிச்செய்தி

எங்கு பார்த்திடினும் எத்திசை நோக்கிடினும், மனித அகங்களிலே காண்பதெல்லாம் சமாதானத்திற்கான ஏக்கங்களே. ஆனால் எம் மண்ணிலே நாம் காண்பதெல்லாம் மரண ஓலங்களும், அவலங்களும், துன்பத்தின் வடுக்களுமே.

மனிதனுடைய ஏக்கங்கள் மட்டுமல்ல, யேசுவின் வருகையும், வாழ்வும், வார்த்தைகளும் சமாதானத்தையே நாடி நிற்கின்றன.

ஆம், யேசு இவ்வுலகிலே பிறந்தபோது அளிக்கப்பட்ட செய்தி ''நல்ல மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக.'' இயேசு இவ்வுலகிலே வாழ்ந்தபோது மக்களுக்கு அளித்த செய்தி ''சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்.'' இயேசு உயிர்த்தபோது சீடருக்கு கொடுத்த செய்தி "உங்களுக்கு சமாதானம்".

நான் தரும் சமாதானம் இவ்வுலகைச் சார்ந்ததல்ல என்று கூறிய சமாதானத்தின் வேந்தன் எம்மிடம் எதிர்பார்ப்பது இறை உணர்வோடு கூடிய சமாதானம். இது உள்ளத்திலிருந்து எழுந்து குடும்பத்தில் பரவி சமுதாயத்தில் சங்கமிப்பது.

எனவே பிறக்கப் போகின்ற யேசு மாட்டுத் தொழுவிலல்ல, மானிடரான நம் உள்ளக் குடிலில் பிறக்க வேண்டும். அதன் மூலம் எம்மத்தியில் நிலவுகின்ற பிளவுகள், பிரிவுகள், பாகுபாடுகள், பகைமை உணர்வுகள், அமைதியற்ற தன்மைகள் அனைத்தும் அகற்றப்பட்டு பிறக்கவிருக்கும் புதிய ஆண்டிலே நாங்கள் புதிய மனிதர்களாக உருமாறிட முயற்சி செய்வோம் எனக்கூறி உங்கள் அனைவருக்கும் எமது செபமாலைத் தாசர் சபையின் சார்பிலே நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**சமாதானம் உள்ளத்திலிருந்து எழுந்து குடும்பத்தில் பரவி சமுதாயத்தில் சங்கமிப்பது.**

அருள்திரு A.M. ஸ்ரீபன்C.R
இலங்கை மாகாண அதிபர்
செபமாலைத்தாசர் சபை.
கொச்சிக்கடை.

# கிறிஸ்மஸ் தரும் செய்தி இது
# ஆயுதம் வேண்டாம்-அன்பை வளர்ப்போம்

எமக்கு மார்கழி மாதம் மலர மகிழ்ச்சி பொங்குகிறது. மாணவர்களின் பரீட்சையும் முடிந்து விடுதலை பெற நத்தார் புது வருடப்பிறப்பு என இப்படி ஒரே விழாக்கள். இவற்றுடன் கூடிவரும் கொண்டாட்டம், விருந்துகள், சந்திப்புக்கள், ஒன்றுசேருதல், வாழ்த்து அனுப்புதல், வீதி வலம் வருதல், கடைகளில் புத்தாடைகள் வாங்குதல் இச்சூழலை ஏற்படுத்தும் வண்ணச் சோடினைகள், விளக்குகள், பலூன்கள், இசைகள், பாட்டுக்கள், நத்தார்பப்பா வருகை, பாலன் குடில், கிறிஸ்மஸ் மரங்கள் இப்படி ஒரே மகிழ்ச்சி மையம். உண்மைதான். மார்கழிக்கு அத்தனை சிறப்புண்டு, கிறிஸ்து பிறந்தநாள். அப்பிறப்பில் அன்றும் மகிழ்வு, இன்றும் மகிழ்வு, இனியும் மகிழ்வு. பிறப்பு மகிழ்ச்சிக்குரியது. வாழ்வு ஆனந்தமானதே! அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்க விடுதலை கிடைக்க இப்பெருமான் கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் கருவாகி உருவாகி மண்ணில் அவதரித்தார். இது நற்செய்தி தரும் செய்தி. ஆயினும் தற்போது மனித இனத்தின் அழிவோ அழிவுக்குண்டுகளோ மாரிபொழிவதுபோல் பொழிவு—ஷெல்களோ ஜில்லென்று செல்கிறது. விமானங்களோ இடி இடிக்குமாப்போல் முழங்குகிறது. இப்படித் ான் எத்தனை. எங்கு பார்த்தாலும் கொடிய யுத்தம். பசி, பட்டினி / அகதிகள் முகாம்கள், வாழ்வோ சாவோ என்று ஏக்கம், பொருளாதார வீழ்ச்சி. அரசியல் குழப்பம். சமூகங்கவில் பிளவு, உரிமைப்போராட்டம். அடக்கு முறைகள், ஆயுதக்கலாச்சாரம், ஆணவப் பேச்சுக்கள், முரண்பாட்டு முறைகள், இப்படி எத்தனை எத்தனை? வசந்தகாலத்தில் வாழத் துடிக்கும் எமக்கு வரண்ட காலத்தில் கோரப் பிடியிலிருந்து எப்படித் தப்ப முடியும்? முடிவு வராதா? விடுதலை, கிடைக்காதா என ஏங்குகிறோம்.

ஏக்கம் தீர கலக்கம் தெளிய, எழிற்சி பொங்க விழிப்பு ஏற்பட சமூகத்தில் அன்பு மலர வேண்டும். பண்பு வளரவேண்டும், தொண்டு நிறையவேண்டும். ஆயுதக் கலாச்சாரம் நீங்க வேண்டும். சிறைச்சாலைகள் மூட வேண்டும். நம்பிக்கை பிறக்க வேண்டும்' அழைப்பு கிடைக்க வேண்டும். புகைழக் களைய வேண்டும். அப்போதுதான் உண்மையான இறை அன்பு நம்மில் ஊற்றெடுக்கும், பிறரை ஏற்கும் தன்மை ஏற்படும். ஒருவரை ஒருவர் புரிந்து வாழும் நிலை உண்டாகும். இதற்கெல்லாம் உதாரண புருஷராக, ஒளிச் சுடராக, தாழ்மையின் சின்னமாக, அமைதியின் அரசன், விடுதலை வீரன், சமாதானத்தின் தந்தை, இறைமகன் கிறிஸ்து மண்ணில் தோன்றினார்.

உண்மையான நிலையான சமாதானம் கிடைக்கும். சமுதாயத்தை மாற்றமுன் முதலில் என்னை நான் மாற்றியமைக்க வேண்டும். என்னில் நான் என்னுள் நான் சமாதானமாக வாழ வேண்டும். இதையே நத்தார் செய்தி எமக்கு நினைவூட்டுகிறது, ஆயுதம் வேண்டாம். கொடிய யுத்தம் வேண்டாம். அன்பை வளர்ப்போம். இறை ஆசீரைப் பெறுவோம். மலரும் புத்தாண்டும், மாண்புறும் நத்தாரும் எமக்கு புத்துயிர் ஊட்டி சமாதானமும் சுபீட்சமும், சாந்தியும் பிறக்க வழிசமைக்கட்டும்.

திருமதி. அ. அ. ஒஸ்வேல்ட்
நெடுந்தீவு



# மாணவர்களுக்கான விடுமுறைக் கால கிறிஸ்மஸ் போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு 1 | முதல் | ஆண்டு 6 | வரை | பிரிவு | I |
| ஆண்டு 8 | முதல் | ஆண்டு 9 | வரை | பிரிவு | II |
| ஆண்டு 9 | முதல் | ஆண்டு 12 | வரை | பிரிவு | III |

நீங்கள் உங்கள் உறவினர் அல்லது நண்பருக்கு 1997 கிறிஸ்மஸ் புத்தாண்டு காலத்தில் அனுப்பக் கூடிய கிறிஸ்மசையும், நாட்டு நிகழ்வுகளையும் பிரதிபலிக்கின்ற கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் ஒன்றை வரைந்து அனுப்புங்கள்.



உங்கள் கல்வி ஆண்டையும் ஆக்கம் உங்களுடையது என்பதையும் உங்கள் பெற்றோரின் ஒப்பத்துடன் உறுதிப் படுத்தி அனுப்புங்கள்.

இறுதிநாள் 5 - 1 - 98.
கண்கவர் பரிசுகள் காத்திருக்கின்றன.



**"அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது"**

(யோவா. 1 : 9)

அந்த ஒளியாம் யேசு உங்கள் வாழ்வை புத்தாண்டில் ஒளிர்விப்பாராக.

(ஆ—ர்)

# விடியலைத் தரும் விண்மீன்

செல்வி.
M. வுளோறன்ஸ்.
சூசைதாஸ்
சென் ஜேம்ஸ் வீதி,
இளவாலை.

காலம் நிறைவுற்றபோது இறைவன் தாம் வாக்களித்த படியே தமது இறைமகனை இவ்வுலகில் மனிதனாக அவதரிக்கச் செய்தார். அவர் தூய ஆவியால் மகாபரிசுத்த கன்னிகையிடம் உற்பவித்துப் பிறந்த தினமே கிறிஸ்மஸ் தினமாகும். இஃது வெறும் மனிதப் பிறப்பு விழா போலன்று. நாம் வாழப் பிறந்தோம், ஆனால் கிறிஸ்து நம்மை வாழ வைக்கப் பிறந்தார். விடுதலை தேடிய மனுக் குலத்திற்கு விடிவைத் தரும் விண்மீனாகவும், மனிதனை இறையன்பில் பங்கு கொள்ளச் செய்யும் அன்பனாகவும் துலங்கி மண்ணிற்கும் விண்ணிற்கும் ஓர் தொடர்பை உண்டு பண்ண இறைவனே மனித இயல்பை மேற்கொண்ட விழாவே இதுவாகும்.

இன்றைய காலகட்டத்தில் அநீதியும் - அக்கிரமமும், கொலையும் - கொள்ளையும், அரச கொடுங்கோன்மையும் சர்வாதிகாரமும், பொறாமையும் - சுகபோகமும்; நான் என்ற அகங்காரமும் ஏற்றத் தாழ்வுகளும், மலிந்துள்ள இச் சூழ்நிலையில் இவற்றிற்கே அன்றாடம் பலியாகும், உயிர்கள், உள்ளங்கள், உடல்கள் எத்தனை! எத்தனை! ஆயினும் இவற்றின் மத்தியில் போலி சமாதான கதவுகளில் திறவுகோலை வைக்கும் கரங்களும் எம் மத்தியில் உண்டன்றோ. ஆயினும் அனைத்துலக சமாதானத் தூதன் கிறிஸ்து 'நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போலன்று'' (அரு: 14 : 24) என்று தத்துவம் பேசுகின்றார். ஆம்; பிறந்திருக்கும் விடுதலை வீரனின் சமாதானத்தை இவ்வுலகம், இச்சமுதாயம் அனுபவிக்க வேண்டுமென்றால் இச் சமாதான வாழ்வை தனிமனிதன் தன் உள்ளத்தில் முதலில் உணர்ந்தேயாக வேண்டும். மீட்பர் யேசுதரும் சமாதானம் செங்கோலில் அல்ல- முள்முடியில்; அடக்கி ஆள்வதில் அல்ல- பணிபுரிந்து வாழ்வதில், சுயநலத்தோடு வாழ்வதில் அல்ல- பொதுநலனுக்காகத் தன்னையே அர்ப்பணிப்பதில், மாடமாளிகை கட்டுவதில் அல்ல- மாட்டுக் கொட்டிலில் திருப்தியாக வாழ்வதில், அகங்காரத்தில் அல்ல- அன்பில் என்பதை தனிமனிதன் ஒவ்வொருவனும் உணர்ந்தால் அங்கே அமைதி பிறக்கும். அப்போது தான் மகிழ்வுற்ற சமுதாயம் உருவாகும்.

# நம்மை மீட்க — ஒரு குழந்தை

அன்று ஒருநாள் நாடு முழுவதும் ஒரே பனிப் படலங்கள் இளம் தென்றல் ஜில் என ஓலமிட குளிர்வாடை வீசியது. எங்கும் இருள் மயம். உலக இரட்சகராகிய யேசுபிரான் பிறக்கவேண்டிய நேரம் அண்மிக்கின்றது.

ஒரு குழந்தையின் பிறப்பானது எந்தக் குடும்பத்திலும் எதிர்பார்க்கப்படுகின்ற வொரு நிகழ்வாகும். ஆனால் நாம் இங்கு குறிப்பிடுகின்ற பிறப்பு நிகழ்ந்ததோ இரண்டாயிரம் வருடங்களின் முன்னர். இப் பிறப்பு ஒரு சாதாரண நிகழ்வுமல்ல, பிறந்த குழந்தை ஒரு சாதாரண குழந்தையுமல்ல, பாகுபாட்டில் ஊன்றித்திளைத்தவர்களாய் ஒருவரோடு ஒருவர் முட்டிமோதிக்கொள்கின்றோம் இன்னும் எமது இல்லங்களிலே, ஆலயங்களிலே வாடிக்கையான வேடிக்கைநிகழ்ச்சிகளும்தேவையற்ற ஆடம்பரம், செலவினங்களுடன் அர்த்தமற்ற விதத்தில் ஆடம்பரமாகக் கொண்டாடி மகிழ்கின்றோம். கிறிஸ்து இவ்வுலகில் மனித அவதாரம் எடுத்த தன் நோக்கத்தை அதன் அர்த்தத்தை நாம் ஏன் நினைப்பதற்கில்லை. ஒடுக்கப்பட்டவர்கள், உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள், ஊரை விட்டே ஓட ஓடத் துரத்தப்பட்டவர்கள், அடைக்கலம் புகாவண்ணம் தடுத்து. நிறுத்தப்பட்டவர்கள், வாழ்



அதன் பிறப்பு ஒரு குடும்பத்தினால் மட்டும் அவ்வாறு முழு மனித குலத்தினாலும் எதிர் பார்க்கப்பட்ட ஒன்று. உலகின் சரித்திர நிகழ்வை எந்தக் காலத்திற்குமாக முழுமையாக மாற்றும் ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.

இதனையே இயேசுக்கிறிஸ்துவின் பிறப்புதான்- கிறிஸ்மஸ் விழா என ஒரு மகிழ்ச்சி விழாவாகக் கொண்டாடுகின்றோம். இறைவனே எம்மை மீட்க மனுவுரு வெடுத்துப் பிறந்த நன்நாள் இது. மீட்பு என்பது முழு விடுதலையைக் குறிக்கும். ஆனால், முழுவிடுதலையை நாம் பெற்று வாழ்கின்றோமா? பிறர் முழு உரிமையுடனும், சுதந்திரத்துடனும் கடவுளின் பிள்ளைகளாக வாழ நாம் எப்படி பணிபுரிகின்றோம் ? நாம் எங்கள் சிறியநாட்டில் பல்வேறுபட்ட ஜாதி, மத குழப்பங்களினால் அங்கலாய்க்கின்றோம். பெரியவன், சிறியவன் என்ற விழந்து வழியிழந்து சொந்தக் குடும்பம் என்ற ஒன்று இல்லாமல் துரத்தி யடிக்கப்பட்டவர்கள், அனைவருக்கும் மீட்பை கொண்டுவரவே அவதரித்தார் யேசு. இன்று ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பை நாங்களும் உய்த்துணர வேண்டும். அவர்களோடு சேர்ந்து அவர்களுக்காக நாங்கள் கண்ணீர்விட முடியுமானால் அங்கு சமூகம் உருவாகின்றது. எமது அயலவரின் துன்பத்தில் நாங்கள் பங்குகொள்ளும்பொழுது நாங்கள் அவர்களின் துன்பத்தைக் குறைக்கின்றோம். இங்ஙனம் நாலுபேர் கூடி தங்கள் தங்கள் துன்பங்களையும், இழப்புகளால் ஏற்பட்ட நோவுகளையும், கோபங்களையும் பகிரும் பொழுது இங்குதான் அன்பு மலரும். வார்த்தை மனுவுருவாகும். இயேசு இவ்வுள்ளங்களில் பிறப்பார்.

P. M. B. கமலதாசன்
கொழும்பு—02

## கண்ணீரில் கரைகின்ற...

விடியாத பொழுதொன்று
விடிந்தது மகனே — அன்று
நீ ... மாயமாய் மறைந்தாயே ... ?

என்பிள்ளை எங்கே ...?
என் பிள்ளை எங்கே ...?
எத்தனை நாட்களாய்
ஏங்கித் தவிக்கின்றேன்?

ஏசு நாதரே ...
என் மகன் உருவில்
நீ வந்து பிறக்காயோ ... ? ?
அத்தனை இரவுகளும்
கண்ணீரில் கரைகின்றனவே ...
நீ வந்து பிறக்கும்
நத்தார் இரவும்
கண்ணீரில் கரைந்திடும்
இரவாக் கிடாதே ...

விரைந்து நீ வா
என்னைப் போன்ற
அழுகின்ற அன்னையர்
மக்களின், உருவில் நீ வா ...
கண்ணீரில் கரைகின்ற எம் வாழ்வை
உன், செந்நீரால் கரைத்திட வா ...

— T. ரவிராஜ் —

## அழைக்கின்றோம் உம்மையே

மார்கழித் திங்களிலே
மாசற்ற மடியினிலே,
மாண்புடன் வந்தவரே
மகிழ்வுடனே உம்மையே
மனதாரத் துதிக்கின்றோம்.

குடிசையிலே எம்மவர்க்காய்
குழந்தையாய் வந்தவரே,
குழந்தைகள் நாம் செய்யும்
குற்றமெலாம் பொறுத்தருள,
குதூகலமாய்த் துதிக்கின்றோம்.

அமைதியின்றி அகிலமெலாம்
அகதியாய் அலைகின்ற,
அவனிவாழ் மாந்தர்களை
அமைதியுடன் வாழவைக்க
அழைக்கின்றோம் உந்தனையே.

எஸ். எஸ். காந்தன்
174/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## அன்றும்...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள் மழையினால் இடம் பெயர்ந்தார். மோயீசன் வரையும் இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கை இடத்துக்கிடம் மாற்றப்பட்டுள்ளது. ஆதியாகமத்தில் கூட ஆதிப் பெற்றோர்கள் சிங்காரத் தோப்பை விட்டு வெளியேறிய காலம் முதல் அவர்களது குடும்பத்தாரும் வாழ்ந்த, அனுபவித்த வாழ்க்கை இன்னல்கள் நிறைந்ததே.

## தெய்வீகக் காட்சி...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் இழந்த இஸ்ரேலர் தம் வாழ்வில் வசந்தங்கள் இனித் தோன்றுமா என ஏங்கினர். காரிருள் களைந்து புதிய விடியல் பூக்குமா என கலங்கினர். மனித சக்திகள் தோற்றுப் போகையில் இறைவன் மாத்திரமே என நம்பினர். இறை நம்பிக்கை அம் மக்களின் வாழ்வின் விடிவுக்கு ஊற்றாகியது. ஆயினும், இயேசுக்கிறிஸ்து என்ற அருணோதயத்தைக் காண எல்லா விழிகளுக்கும் கொடுத்து வைக்கவில்லை.

ஆண்டவனால் அனைத்தும் ஆகும் என்று அவர் திட்டத்திற்கு தன்னை முற்றும் அர்ச்சனையாக்கிய மரியன்னை தெய்வ குழந்தையைக் கண்டாள். நீதிமானாகவும் நேர்மை தவறாத தாவீது குலத்து சூசை குழந்தையில் தெய்வத்தைக் கண்டார். எளிமையும், தூய்மையும், கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிகளான இடையர்கள் தெய்வ தரிசனம் கண்டார்கள்.

சாதி, இன, மத வரையறைகளைக் கடந்து உண்மையைத் தேடிய ஞானிகள் குழந்தை கடவுளைக் கண்டார்கள்.

குருடராய், முடவராய், நோயாலும், பேயாலும் வாடி பாவியர் குறைந்தவர் என ஒதுக்கப்பட்டோர் பலர் இயேசுவை ஒளி, வழி, வாழ்வு, அன்பு எனக் கண்டு கொண்டார்கள்.

இயேசுவின் போதனை கேட்டு, அவரது சாவுப் பயணத்தில் பங்கு கொண்ட பல சீடர்கள் இயேசுவைத் தம் மெசியாவாகக் கண்டார்கள்.

இயேசுவின் பிறப்பு வெறுமனே வரலாற்று செய்தி கூறி வீணாகக் காலத்தை கழிக்கும் கழியாட்டமாகக் கூடாது. சம்பிரதாயக் காதலர்களாக கிறிஸ்துவிழாவை வெறும் போலியாகக் கழித்துவிடக் கூடாது.

மாறாக, நிகழ்வின் பொருள் உணர்ந்து பாலைவனம் போலாகிய எமது உள்ளங்கள் திறந்து அமைதியின் மன்னரை வரவேற்று அவரது பிறப்பினால் தோன்றிய தெய்வீக வாழ்வை எமது வாழ்வில் ஓர் அனுபவமாகக் கொண்டாடுவோமா?

"இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்.
அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" (மத். 1 : 22 - 23)